பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 28 சனிக்கிழமை 15.10.2022 கதிர் 342

### இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு ஆளுநர் தமக்கு பிடிக்காத அதிகாரி என இருவரை அதுவும் வடக்கு மண்ணில் யுத்த காலம் தொட்டு திருப்தியான பணியாற்றி வந்த அலுவலர்களை - சொந்த விருப்பு வெறுப்புக்காக - வடக்கிலிருந்து விரட்டினார். ☞2

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் அடுத்த மாதம் பேச்சு; வெற்றியளித்தால் சர்வதேச தலையீடு இருக்கவேமாட்டாது

## நீதி அமைச்சர் தெரிவிப்பு; உள்ளகப் பொறிமுறை ஊடாகவே தீர்வு என்றும் சொல்கின்றார்

பொறுப்புக்கூறல் விடயத்தில் உள்ளகப் பொறிமுறையின் ஊடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சித்து வருகின்றோம். அடுத்த மாதம் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் அரசு பேச்சுகளை நடத்தவுள்ளது. இந்தக் கலந்துரையாடல் வெற்றி பெற்றால் இலங்கை விடயத்தில் சர்வதேச தலையீடுகள் இருக்கமாட்டாது.

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேசப் பொறிமுறையின் ஊடாக சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டு தேசிய பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஐக்கிய நாடுகள் சபையின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

எனினும், தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கையே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அந்தவகையில் உள்நாட்டுப் பொறிமுறையொன்றின் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. ☞2



# வன்முறைக்கு இடமில்லை: விரைவில் தீர்வு கிடைக்கும்

## திருமலையில் ரணில் உறுதி



"இந்த நாட்டில் இனிமேல் இன, மத வன்முறைகளுக்கு இடமில்லை. அனைவரும் சுதந்திரமாக நடமாடும் நிலைமை தொடர்ந்து நீடிக்கும்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ☞14

## மஹிந்த - சீனத் தூதர் சந்திப்பு



இலங்கைக்கான சீனத் தூதுவர் ஜி செங்கொன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று கொழும்பில் சந்தித்து பேசினார்.

பரஸ்பரம் நல்லெண்ண அடிப்படையில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது மீண்டும் சீன ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் ஷி ஜின்பிங்கிற்கான வாழ்த்து மடல் ஒன்றை மஹிந்த ராஜபக்ஷ சீனத் தூதுவரிடம் கையளித்தார்

சீன - இலங்கை உறவு, பொருளாதார அபிவிருத்தி, இரு நாடுகளுக்கும் இடையான பொதுவான வேலைத் திட்டம் ☞2

## இலங்கையின் கடன் மறுசீரமைப்பு; நீடிக்கிறது சீன, இந்திய மௌனம்!

இலங்கை மீளச் செலுத்த வேண்டிய கடனின் தவணைக் கொடுப்பனவை மறுசீரமைப்பு தொடர்பாக இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து துரிதமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என பரிஸ் கிளப் தெரிவித்துள்ளது.

இலங்கை ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடாக இருப்பதால், ஜி20 பொதுத் திட்டத்தின் கீழ் சலுகைகளுக்கு விண்ணப்பிக்க முடியாது என்றும் அந்த கிளப் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுக் கடனை ☞14

## அனைத்து விளை நிலங்களிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்க

### உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த வழிமுறை கூறுகிறார் ஜனாதிபதி

நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு அனைத்து விளை நிலங்களிலும் பயிர்ச் செய்கையை முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். ☞14

## இந்தியாவுடன் இணைந்தே திருகோணமலை அபிவிருத்தி

### நேற்று ரணில் திட்டவட்ட அறிவிப்பு

திருகோணமலை மாவட்ட மூலோபாய அபிவிருத்தித் திட்டமானது தேர்தலை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவில்லை என்றும், இது அடுத்த சந்ததியினருக்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை ☞14



## ஈழ இளையோர் இருவர் மார்க்கம் விபத்தில் சாவு



கனடாவின் ரொறன்ரோ மார்க்கம் நகரில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஈழத்தமிழ் பூர்வீகத்தை கொண்ட இளையோர் இருவர் உயிரிழந்துள்ளனர். ☞14

## நடுத்தர வர்க்க மக்களையே இந்த வரி விதிப்பு பாதிக்கும்

### சித்தார்த்தன் எம்.பி. விசனம்

சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தலின்படி செயற்பட்டு அரசாங்கம் வரிகளை விதிக்கிறது. அல்லது அவர்களுடைய நிபந்தனைகளின் அடிப்படையிலேயே தான் தற்போதைய வரிவிதிப்புக்கள் இடம்பெறுகின்றன போல உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழில் ஊடகங்களுக்கு கருத்துவெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - ☞14

## ஞானசாரருக்கு பிடியாணை!



பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ☞14

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ...................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்குத் தேவையில்லை என்று ஆளுநர் விலக்கியவர்களில் ஒருவர் இன்று ஜனாதிபதி செயலகத்தில் மேலதிக செயலாளர். அதுவும் வடக்கு விடயங்களைக் கையாளும் பிரிவுக்கு.

பிறகென்ன? வடக்குத் தொடர்பில் ஜனாதிபதியின் தீர்மானங்கள், முடிவுகள் போன்றவை ஆளுநர் உட்பட தரப்புகளுக்கு அறிவிப்பதும், கையாள்வதும், முக்கிய விடயங்களை ஆளுநர் உட்பட்டோர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதும் கூட இவர் ஊடாகத்தான் என்று இருக்கப் போகின்றது.

இதில் இன்னொரு விடயமும் உண்டு. மேற்படி மேலதிக செயலாளரின் முழுக் கவனமும் வடக்கின் மீது இருக்க வேண்டும் என்பதற்காக அவரது அலுவலகமும் வடக்கில் இருப்பதை உறுதிப்படுத்த மேலும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்றும் தெரிகிறது.

ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளராகப் பதவியேற்ற அவர் வடக்கில் தமது அலுவலகத்திற்கு இடம் தேடும் நடவடிக்கையில் இருப்பதை அறிய முடிந்தது.

இவர் வடக்கிலிருந்து கலைத்தார். அவரோ செயலகத்தில் மேலதிக செயலாளர் என்ற கோதாவுடன் வடக்கேயே வருகின்றார்.

நாரதர் விளைவித்த கலகம் நாரதருக்கு நன்மையாக முடியாவிட்டாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கும் வடக்குப் பொதுமக்களுக்கும் நன்மையாகத்தான் முடிவடைந்து இருக்கின்றது.

***

காலைக்கதிர் கடந்த ஐந்தாம் திகதி - பத்து நாள்களுக்கு முன்னர் - முன்பக்கத் தலைப்புச் செய்தி ஒன்றைப் பிரசுரித்தது. இலங்கையில் வேறு எந்த ஓர் ஊடகத்திலும் அச்செய்தி அதன் பின்னரும் வெளிவரவில்லை. அந்தச் செய்தியைப் பிரசுரிப்பது ஊடகத்திற்கு நெருக்கடி தரும் என்றாலும், செய்தியை வரைந்த செய்தியாளனின் மிக உறுதியான ஆதாரங்களில் முழு நம்பிக்கை வைத்து - அவற்றின் அடிப்படையில் எந்த நெருக்கடியையும் எதிர் கொள்ளலாம் என்ற துணிச்சலில் - அதை முன் பக்க பிரதான தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்தோம்.

'கப்பலுடன் ஆறு கடற்படையினர் வெளிநாட்டுக்குக் கம்பி நீட்டினார்?; 17 நாள்களாகியும் ஆள்களைக் காணவில்லை; அமுக்கி வாசிக்கின்றது பாதுகாப்பு தரப்பு' என்பதுதான் அச்செய்தி.

இந்த ஆறு பேரும் இலங்கை கடற்பிராந்திய எல்லையை விட்டு வெளியேறி வெளிநாடு ஒன்றுக்கு கம்பிநீட்டி இருக்கலாம் எனப் பேசப்படுகின்றது என்பது தொடர்பான விடயங்களை அச்செய்தி விவரித்து இருந்தது. அவர்கள் தப்பித்த கடற்கலத்தின் ஒரு பக்க படத்தை கூட அந்தச் செய்தி தங்கி இருந்தது.

இந்தச் செய்தியை கடற்படை இது வரை உறுதிபடுத்தவும் இல்லை; மறுக்கவும் இல்லை.

செய்தியில் நாம் குறிப்பிட்டபடி இவ்விடயத்தில் பாதுகாப்பு தரப்பு பம்மிக் கொண்டுதான் இருந்தது. 'காலைக்கதிர்' செய்தியை 'ஒப்புக்கு சப்பாணி' ஆகக் கூட மறுக்க அது முன் வரவில்லை.

இப்போது - நேற்று - தென்னிலங்கை ஆங்கில ஊடகம் ஒன்று, இந்த வாரம் முற்பகுதியில்தான் ஆறு கடற்படையினர் ஒரு படகுடன் மாயமானார்கள் என்று 'காலைக்கதிர்' ஏற்கனவே 'எக்ஸ்க்ளுசிவ்' ஆக வெளிப்படுத்திய செய்தியை தனது விடே - தனித்துவ - செய்தியாக காட்டி முன்பக்கத் தலைப்பு செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அவர்கள் அறுவரும் இலங்கை கரையை விட்டு புறப்பட்டு 27 நாள்கள் கடந்து விட்டன. ஆனால் ஐந்து,ஆறு நாள்களுக்கு முன்னாலேயே அவர்கள் காணாமல் போய் உள்ளனர் என அந்த ஊடகம் இப்போது கதை விடுகின்றது.

அதில் ஏதோ சூத்திரம் - தந்திரம் - புதைந்திருப்பதாகத் தோன்றுகின்றது. தேடிப் பார்த்தால், பாதுகாப்பு தரப்பின் இந்த மூடி மறைப்பின் அர்த்தமுள்ள பின் புலம் வெளிப்படும் என்று நினைக்கிறேன்.

**- மின்னல் -**

## புலம்பெயர் தமிழ் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டுப் பொறிமுறையின் கீழ் தீர்வுக்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் பெறுபேறுகள் கிடைக்கும் பட்சத்தில் அதற்கான சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வருகின்றது. அது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு பரிந்துரைகள் பலவற்றையும் வழங்கியுள்ளது. அந்தப் பரிந்துரைகளை அடிப்படையாகக்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நிதி அமைச்சின் கீழ் மூன்று அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்றன. அந்தவகையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமும் அதில் உள்ளடங்குகின்றது. அந்த அலுவலகத்திலுள்ள 7 ஆயிரம் கோவைகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் 65 கோவைகள் மாத்திரமே விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

எமது நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்துவதற்கு இத்தகைய தாமதங்களே முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

கடந்த மூன்று மாத காலங்களில் நாம் 1,800 கோவைகளை விசாரணை செய்திருக்கின்றோம். அதற்கிணங்க அடுத்த வருட இறுதிக்குள் அனைத்துக் கோவைகளையும் விசாரணை செய்து முடிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அந்தவிசாரணைகள் முடிவடைந்ததும் அந்த விடயங்களை இழப்பீட்டுக்கான அலுவலகமே கையாளவுள்ளது.

அரசானது அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோருக்காக வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவை இரண்டு லட்சமாக அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. கடந்த அமைச்சரவையில் அதற்கான அனுமதி கிடைத்துள்ளது - என்றார்.

## மஹிந்த - சீனத் தூதர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியன் பற்றியும் இந்தச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களான காமினி லொக்குகே, பவித்ரா வன்னியாராச்சி, அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரன, அமைச்சர் சுரேன் ராகவன், பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் பங்குபற்றினர்.





**மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள் 17.10.2022 ஆரம்பமாகின்றன.**

**Civil Draftsperson (NVQ level 4) course – 1 year**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
**Course leads to:**
» Follow course in NVQ level 5
»Register for drawings at local councils

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*
» Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
»Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw
» Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
»AutoCAD 2D & 3D Modeling
»Java, C++ Programming
» Accounting Package Tally

**Our Civil Draftmanship & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too**

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)
» அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் -Aluminum Fabrication

**மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports**

For More Information : DIRECTOR
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.**
**Tel :0212223382/0212250975 E-mail: ejcit@sltnet.lk**



V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

**அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்**

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

**0768226244**
**0768226240**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேர்தலை தடுக்க இடமில்லை

"நாட்டில் எதிர்வரும் மாதங்களில் எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு வாய்ப்பில்லை. நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கான தேசியக் கொள்கைக் கட்டமைப்பை வகுத்த பின்னரே தேர்தல் நடத்தப்படும்."

– இப்படி அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இடத்துக்கு நாடாளுமன்றத்தில் எம்.பி.பதவியைப் பெற்றிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான வஜிர அபேகுணவர்தன்.

இந்த அறிவிப்பை – அறிவித்தலை – அவரது தனிப்பட்ட தீர்மானமாக இல்லாமல், அவர் சார்ந்த கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து நிலைப்பாடாகவும் கருத முடியும். அதையே அவர் பிரதிபலித்திருக்கிறார்.

'சட்டத்தம்பி பேசக்கூடாது, சட்ட புத்தகம் பேச வேண்டும்.' – என்பார்கள்.

நாட்டின் சட்டங்கள், அரசமைப்பு முறைமைகள், தேர்தல் சட்டங்கள் போன்றவற்றின் அடிப்படையில் அடுத்த ஐந்து மாதங்களுக்குள் ஒரு தேர்தல் நடத்தப்படுவது தவிர்க்க முடியாத சட்டக் கட்டாயமாகும்.

அதற்கிடையில் ஏதேனும் சட்டத்தைப் புதிதாகக் கொண்டு வந்து நிறைவேற்றி, அதன் மூலம் தேர்தலை நடத்தாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், தேர்தல் கட்டாயம் நடந்தே ஆக வேண்டும்.

இது உள்ளூராட்சித் தேர்தல் காலம். தற்போதைய – நீடிக்கப்பட்ட – உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் பெரும்பாலும் மார்ச் 20 இல்தான் முடிவடைகின்றது அதற்கு முன்னர் அடுத்த நிர்வாகம் தெரிவு செய்யப்படக் கூடியதாக உள்ளூராட்சி தேர்தல் நாடு முழுவதும் நடத்தப்பட வேண்டும்.

அதற்கான தேர்தலை நடத்துவதற்கான சட்ட அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வந்து 25 நாள்கள் ஆகிவிட்டன. எந்த நேரமும் தேர்தல் ஆணையம் உள்ளூராட்சித் தேர்தலை பிரகடனப்படுத்தி, தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம். அதை தடுப்பதற்குரிய அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ரணில் விக்க்க்ரமசிங்கவுக்குக் கூட சட்டத்தில் கிடையாது.

அப்படி அந்தத் தேர்தலை நடத்த விடாமல் தடுப்பதற்கான சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றும் ஐக்கிய நிலையில் ஆளும் பொதுஜன பெரமுனவோ, அதன் அருள் கடாட்சத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு வந்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவோ இல்லை.

நாட்டு நிதி, பொருளாதார நெருக்கடி என்பன தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு வாய்ப்பானதாக இல்லை என்று கூறி, தேர்தலை நடத்தும் சட்டக் கடப்பாட்டை அரசோ, அதிகாரிகளோ, அரசியல் தலைவர்களோ கூடத் தடுக்க முடியாது.

அப்படி இருக்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது அவரது கட்சியின் எம்.பியான வஜிர அபேகுணவர்தனவோ தேர்தல் ஏதும் இப்போதைக்கு இல்லை என்று கூறுவது சட்டத்துக்கும் அரசமைப்பு ஏற்பாடுகளுக்கும் முரணானதாகும்.

உள்ளூராட்சி தேர்தல் அடுத்த ஐந்து மாதத்திற்குள் நடந்து முடிவதை தடுப்பதற்கான சட்ட முகாந்திரம் ஏதும் இப்போதைக்கு இல்லை என்பதுதான் யதார்த்த புறநிலை உண்மையாகும்.

## யூனிவேர்சிற்றி கிரிக்கெட் லீக் கிண்ணத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு யாழ்.பல்கலையில்!



யாழ்.பல்கலைக் கழகப்பணியாளர்களிடையே புரிந்துணர்வையும், நட்புறவையும் நிலைபெறச் செய்யும் நோக்குடன் நடத்தப்படவுள்ள யூனிவேர் சிற்றி கிரிக்கெட் லீக் – துணைவேந்தர் வெற்றிக் கிண்ண அறிமுக நிகழ்வு புதன்கிழமை யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதற்கமைய போட்டியில் பங்குபற்றும் அணிகளின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள், அணித் தலைவர்கள், வீரர்களின் முன்னிலையில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா வெற்றிக் கிண்ணத்தைத் அறிமுகம் செய்து வைத்தார்.

இதேவேளை அறிமுக ஆட்டத்துடன் முதற் சுற்று போட்டிகள் நாளை (சனிக்கிழமை) காலை 7.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் ஆரம்பமாகவுள்ளதோடு இறுதி போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

## உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் கிரிக்கெட் போட்டியில் வலி. கிழக்கு அணி சம்பியனானது!





யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நெடியகாடு இளைஞர் கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் வலி.கிழக்கு பிரதேச சபையின் பதில் தவிசாளர் மகேந்திரலிங்கம் கபிலன் தலைமையிலான வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் அணி சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

வலி கிழக்கின் பிரதேச சபையின் தவிசாளர் வெளிநாடு சென்றுள்ளமையால் பதில் தவிசாளராக மகேந்திரலிங்கம் கபிலன் நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆஸி தமிழ் இலக்கிய கலைச்சங்க ஏற்பாட்டில்

## கே.எஸ்.சிவகுமாரன் நினைவு நிகழ்வு மெய் நிகரில் இன்று நடைபெறுகிறது




இலங்கையில் அண்மையில் மறைந்த மூத்த எழுத்தாளரும், ஊடகவியலாளரும் இலக்கியத் திறனாய்வாளருமான கே.எஸ். சிவகுமாரனின் வாழ்வையும் பணிகளையும் நினைவுகூர்ந்து உரையாடும் வகையில், அன்னாரைக் கொண்டாடும் நிகழ்ச்சியை ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இன்று 15 ஆம் திகதி சனிக்கிழமை மெய்நிகரில், சங்கத்தின் தலைவர் திருமதி சகுந்தலா கணநாதன் தலைமையில் ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் இணைந்துகொள்ளுமாறு கலை, இலக்கியவாதிகளையும், ஊடகவியலாளர்களையும் ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம் அழைத்துள்ளது.

மெல்பனிலிருந்துஎழுத்தாளர்கள்லெ.முருகபூபதி, நோயெல் நடேசன், சிட்னியிலிருந்து எழுத்தாளர், சட்டத்தரணி, சந்திரிகா சுப்பிரமணியம், எழுத்தாளரும், ஒலிபரப்பாளருமான கானா.பிரபா, பேராசிரியர் மு. நித்தியானந்தன் (இலண்டன்), இலங்கையிலிருந்து பேராசிரியர் மௌனகுரு, கவிஞர் பூர்ணிமா கருணாகரன், எழுத்தாளரும் பத்திரிகையாளருமான செங்கதி ரோன் கோபாலகிருஷ்ணன் மற்றும் கவிஞரும், ஒலிபரப்பாளருமான கோவிலூர் செல்வராஜன் (இலண்டன்), ஊடகவியலாளர் வரதராசா மரியாம்பிள்ளை (நியூசிலாந்து) முதலிய பலர் இந்த நிகழ்ச்சியில், அமரர் கே.எஸ்.சிவகுமாரன் பற்றிக் கருத்துரையாற்றவுள்ளார்கள்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: சட்டத்தரணி பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா

மெய்நிகர் இணைப்பு:

Join Zoom Meeting

https://us02web.zoom.us/j/84185296033?pwd=Nk42STFLeTFRY04wTlNhYWNweWN1QT09

Meeting ID: 841 8529 6033

Passcode: 677724

**ஆஸ்திரேலியா நேரம் : இரவு 8.00 மணி**
**இலங்கை, இந்திய நேரம்: பிற்பகல் 2.30 மணி.**
**இங்கிலாந்து நேரம் : முற்பகல் 10.00 மணி.**
**ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே : முற்பகல் 11.00 மணி.**
**நியூசிலாந்து : இரவு 10.00 மணி.**
**கனடா : காலை 5.00 மணி.**

## பெற்றோல் நிரப்பு நிலையங்களில் முறைகேடுகள் குறித்து சுமார் 200 முறைப்பாடுகள் பதிவாகின!

பெற்றோல் நிரப்பு நிலையங்களில் இடம் பெறும் முறைகேடுகள் தொடர்பாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

இந்த முறைகேடுகள் தொடர்பாக சுமார் 200 முறைப்பாடுகள் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளன என அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். எரிபொருளின் தரம் சரியாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, நாடு முழுவதும் உள்ள நிரப்பு நிலையங்களில் இருந்து 20 எரிபொருள் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சோதனைக்காக தொழில் நுட்ப நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 60 நிரப்பு நிலையங்களில் எரிபொருள் மாதிரி சோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வுகளின்போது, பல நிரப்பு நிலையங்கள் எரிபொருளை மறைத்து வைத்திருப்பது தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த அவர், பல நிரப்பு நிலையங்கள் குறைந்த எரிபொருளை விநியோகித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

# சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் இன்று ‘வாழ்வகம்’ தலைவரின் கருத்துப் பகிர்வு

இனிய உடன்பிறப்புக்களே, இன்னும் ஒரு தடவை உங்களோடு உரையாடக் கிடைத்த இந்த இனிய வாய்ப்புக்காக இறைவனுக்கும் இந்த ஊடகத்துக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உன்னதமான மனிதப் பிறவி வாய்க்கப்பெற்ற நாம் அப் பிறவியின் உச்சங்களைச் சற்றேனும் எட்டிப் பார்க்கவேண்டும். உயர்வாய், மகிழ்வாய் மதிப்புடன் வாழவேண்டும். விழிப்புலவலுவிழந்தோரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். விழிப்புல வலுவிழப்பு ஒரு குறையென்றபோதிலும் அது உங்கள் நல்வாழ்வுக்கு ஒருபோதும் தடையாகாது என்பதை உங்கள் மனங்களில் ஆழப் பதித்துக்கொள்ளுங்கள். உங்களால் முடியாது என்று மற்றவர்கள் கூறுகின்ற வார்த்தைகளைத் தூக்கியெறிந்துவிட்டு கடுமையாய் முயற்சி செய்யுங்கள். அவர்கள் உரைத்தது பொய் என்பதை அப்போது நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

உடன்பிறப்புக்களே, கண்களுக்குப் பதிலாய் உங்கள் வாழ்வில் ஒளி தர வல்லது கல்வி மட்டுமே என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற ஆன்றோர் வாக்கு உங்களுக்காகவே உரைக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் மீது மட்டுமல்ல, உங்கள் உடன்பிறப்புக்கள் மீதும் கல்வி வெளிச்சம் படவேண்டும் என்பதற்காகப் பணி செய்யுங்கள், பாடுபடுங்கள். குறிப்பாக, விழிப்புலவலுவிழந்த பெண்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு பற்றி அதிகமதிகமாய் சிந்தியுங்கள். ஏனெனில், விழிப்புல வலுவிழந்தோரில் அதிகம் தீங்குறுபவர்களாக அவர்களே காணப்படுகின்றனர். இதுவரை காலமும் இவர்களுக்காக ஆற்றப்பட்ட பணிகளைக்காட்டிலும் இன்னும் அதிகமதிகமாக ஆற்றப்படவேண்டும் என்பதை மனதிற்கொள்ளுங்கள்.

உன்னத இலட்சியங்களும் உழைப்பும் விடா முயற்சியும் உடைய ஒரு மனிதனின் முன்னால் எதுவும் தடையாக நிற்க முடியாது.

அனைவருக்கும் என் இதயம் நிறைந்த சர்வதேச




வெள்ளைப்பிரம்பு தின வாழ்த்துக்கள்.

**- ஆறுமுகம் ரவீந்திரன் -**
**(தலைவர், வாழ்வகம் - விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.)**

# மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவி பணிப்பாளர்களுக்கு இடமாற்றம்!

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவி பணிப்பாளர்களுக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை அமுலாகும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மன்னார் மாவட்ட கடற்தொழில் உதவி பணிப்பாளராக கடமையாற்றிய சரத் சந்திர நாயக்க எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளராக இட மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளராக கடமையாற்றிய வி.கலிஸ்ரன் மன்னார் மாவட்ட கடற்தொழில் உதவி பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில நாள்களாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சமாசம் ஒருங்கிணைந்து, முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் உதவி பணிப்பாளர் தடை செய்யப்பட்ட கடற்தொழிலுக்கு துணை போகிறார் எனவும் ஆகவே அவரை இட மாற்றம் செய்யுமாறு கோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு கடற்றொழில் அலுவலகத்துக்கு முன்பாக நடத்தி வந்த மேற்படி போராட்டத்திற்கு அமைவாக இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.



# நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மஹிந்த தலைமையில் பெரமுன கூட்டம்!



## வடக்கு, கிழக்கு தவிர்ப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த கூட்டம் நாவலப்பிட்டி நகரில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர் என பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி அடுத்த தேர்தலுக்கு கட்சியை தயார்படுத்தும் வகையில் இந்தக் கூட்டத் தொடர் நடத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத கசிப்பு விற்பனை நிலையங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் முற்றுகையிடப்பட்டன!

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் சட்ட விரோத கசிப்பு விற்பனை நிலையங்கள் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்களத்தால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை அதிகாலை முதல் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது இந்த முற்றுகைகள் முன்னெடுக்கப்பட்டன.

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு,முள்ளாமுனை,பத்தரைக்கட்டை,கன்னங்குடா மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளிலேயே இந்த விசேட முற்றுமை முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் எஸ்.ரஞ்சனின் அறிவுறுத்தலின் கீழ் மட்டக்களப்பு மதுவரித்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி நியூட்டன் அவுட்ஸ்கோன் தலைமையிலான குழுவினர் இந்த முற்றுகையை முன்னெடுத்தனர்.

இந்தப் பகுதிகளில் உள்ள ஆறுகளை அண்டியுள்ள காட்டுப்பகுதியிலேயே சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பெருமளவான கசிப்பு மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மதுவரித்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி நியூட்டன் அவுட்ஸ்கோன் தெரிவித்தார்.

இதன்போது ஆறு பேர் கைதுசெய்யப்பட்டதுடன் சுமார் 130 லீற்றருக்கும் அதிகமான கசிப்பு மீட்கப்பட்டதாகவும் கைதுசெய்யப்பட்டவர்கள் சொந்தப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் இம்மாதம் 03ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரையில் அனுமதிப்பத்திரமின்றி மது பானம் மற்றும் பியர் விற்பனை செய்த 25 வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளதாக மட்டக்களப்பு மதுவரித்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி நியூட்டன் அவுட்ஸ்கோன் தெரிவித்தார்.






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Gheee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மஹிந்த மீண்டும் பிரதமராக வருவதில் எந்தப் பிரச்சினைகளும் கிடையாதாம்!

## லொகான் ரத்வத்த கூறுகிறார்

மக்கள் ஒருபோதும் மஹிந்த ராஜ பக்ஷவை வீட்டுக்கு செல்லுமாறு போராட்டம் நடத்தவில்லை என்றும் அவர் மீண்டும் பிரதமராகலாம் என பெருந்தோட்ட கைத்தொழில் இரா ஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த தெரிவித்தார்.

பனை அபிவிருத்தி சபையின் தலைமை அலுவலக கட்டடத் தொகுதி திறப்பு விழாவில் கலந்துகொண்டு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களின் எதிர்ப்பால் சற்று விலகி இருக்கின்றாரே தவிர அவரை வீட்டுக்கு போகுமாறு மக்கள் பணிக்கவில்லை. அவ்வாறான நிலையில் அவர் மீண்டும் பிரதமராக வருவதில் எந்த பிரச்சினையும் கிடையாது.

நாடாளுமன்றத்தில் உரிய முறையில் தெரிவு இடம்பெறும் போது மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராக வரக்கூடிய சாத்தியகூறு காணப்படுகிறது. எனினும் தற்போதுள்ள பிரதமருக்கு நாங்கள் முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றோம். – என்றார்.



# பனை அபிவிருத்தி சபையின் தலைமைக் கட்டடம் திறப்பு!

யாழ். கைதடி பகுதியில் பனை அபிவிருத்தி சபையின் தலைமை அலுவலக கட்டடம் நேற்று (வியாழக்கிழமை) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்திற்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டட தொகுதியே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜனக தர்மகீர்த்தி, பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜா, யாழ்.மாவட்ட செயலாளர் க.மகேசன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# யாழில் இருந்து 100 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தென்பகுதிக்கு விஜயம்!

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான உறவு பாலத்தை மேம்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத்திலிருந்து 100 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தென்பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளனர் என கொழும்பு மாநகர சபை முதல்வர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மாநகர சபை, மானிப்பாய் பிரதேச சபை, உடுவில் பிரதேச சபையின் 100 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மூன்று நாள் விஜயமாக தென்பகுதிக்கு அழைத்து செல்லப்படவுள்ளனர் எனக் கொழும்பு மாநகர சபை முதல்வர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நவம்பர் மாத முற்பகுதியில், யாழ்ப்பாண மாநகர சபை, உடுவில் பிரதேச சபை, மானிப்பாய் பிரதேச சபையைச் சேர்ந்த 100 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு கொழும்பில் முக்கிய இடங்களான ஜனாதிபதி செயலகம், தாமரைக் கோபுரம், தாமரைத் தடாகம், நாடாளுமன்றம் மற்றும் ஏனைய கொழும்பின் முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதோடு கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களுடன் சிநேகபூர்வமான கிரிக்கெட் சுற்றுப் போட்டி மற்றும் வடக்கு தெற்கிற்கான உறவுபாலத்தை மேம்படுத்துவதற்காக வேலை திட்டம் கொழும்பு மாநகர முதல்வரால் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டதை போல யாழ்ப்பாணத்தில் இருந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தென்பகுதிக்கு அழைத்து செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீடு உடைத்துத் திருடிய குற்றம்; மானிப்பாயில் இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீடு உடைத்து திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 08ஆம் திகதி கட்டுடை பகுதியில் உள்ள வீடொன்றின் ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளை திருடிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களிடம் இருந்து 7 பவுண் தங்க நகைகளை மீட்டுள்ளதாகவும் அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் வார்டுகளை அறிமுகப்படுத்துவது குறித்து சுகாதார அமைச்சு ஆராய்வு



தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் செலவினக் குறைப்புகளுக்கு மத்தியில் சுகாதார சேவையை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் அரசுக்கு சொந்தமான வைத்தியசாலைகளில் அதிக கட்டணம் செலுத்தும் வார்டுகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சு பரிசீலித்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, 30 சதவீத பணம் செலுத்தும் வார்டுகளை அறிமுகப்படுத்துவது பற்றி சுகாதார அமைச்சு பரிசீலித்து வருவதாகத் தெரிவித்தார்.

இது செலவை மீட்டெடுப்பதற்கு மட்டுமல்ல, தனியார் துறையைவிட எங்களால் சிறந்த சேவையை வழங்க முடியும் என்றும் ஓர் அறையுடன் சிறந்த சேவையை மக்கள் பார்த்தால், அவர்கள் கட்டண வார்டுகளுக்குச் செல்வார்கள் என்றும் அவர் கூறினார்.

அரச வைத்தியசாலைகளில் தனியான ஷிப்ட் அடிப்படையிலான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர், இலவச மற்றும் கட்டண வார்டுகளுக்கு இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

பணம் செலுத்தும் வார்டு முறை சத்திரசிகிச்சைகளுக்காக காத்திருக்கும் வரிசையை 2 வருடங்களுக்குப் பதிலாக ஆறு மாதங்களாகக் குறைக்கும் என சுட்டிக்காட்டிய சுகாதார அமைச்சர், உத்தேச பணம் செலுத்தும் வார்டு முறைமை இன்னும் அமைச்சரவைக்கு முன்மொழியப்படவில்லை என்றும் கூறினார்.

கொழும்பு தேசிய மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் வார்டுகளை அறிமுகப்படுத்துவதற்கான யோசனை ஏற்கனவே நடைமுறையில் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

NFlash Super Detergent

வேலை வாய்ப்புக்கள்

வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்

கணனி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்.
சாரதி - Light Vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)
மேற்பார்வையாளர் (முன்பள்ளி) - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர்- வாகன உதவியாளர் (பெண்),
ஆசிரியர்- தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள்தேவை
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் ரோல், வடை போன்ற நொறுக்குத் தீனிகள் தயாரிப்பவர்கள் ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி - விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதி வாய்ந்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி - 186/11 NFlash Super detergent
நெசவுசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



# மனித நேயத்தைத் தட்டியெழுப்பும் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம்!

## லயன்ஸ் கழக முயற்சியால் சட்ட அங்கீகாரமும் கிடைத்தது

இன்று சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகும். ஒரு வகையில் இது மனித நேயத்தைத் தட்டியெழுப்புகின்ற – கட்டியெழுப்புகின்ற – ஒரு தினம் என்று கூறினும் மிகையாகாது.

இந்த நாளிலே இதன் தாற்பரியம் பற்றி சற்றே சிந்திப்பது மிகவும் பொருத்தமுடையதாயிருக்கும்.

வெள்ளைப் பிரம்பு என்பது கண் பார்வையற்றவர்கள் சுயமாக நடமாடுவதற்குப் பயன்படும் ஒரு சாதனமாகும். பல நூற்றாண்டுகளாக விழிப்புலனற்றவர்கள் சுயமாக நடமாடும்போது ஒரு தடியை அல்லது பிரம்பைப் பயன்படுத்தியே வந்தார்கள்.

எனினும், இருபதாம் நூற்றாண்டிலேயே அதற்கு வெள்ளை நிறமூட்டப்பட்டு, வெள்ளைப் பிரம்பு என்ற நாமமும் சூட்டப்பட்டு, விழிப்புலனற்றவர்களின் அடையாளச் சின்னம் என்ற அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

அமெரிக்க லயன்ஸ் கழகத்தினரின் அரும் முயற்சியாலேயே வெள்ளைப்பிரம்பு விழிப்புலனற்றோரின் அடையாளச் சின்னமாக சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டிலே முதல்முதலாக வெள்ளைப் பிரம்பு தினம் அமெரிக்காவில் அனுஷ்டிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1969 ஆம் ஆண்டு இலங்கையிலே நடைபெற்ற அகில உலகப் பார்வையற்றோர் சம்மேளனத்தின் மாநாட்டிலே சர்வ





தேச வெள்ளைப்பிரம்பு தினம் தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் ஒக்ரோபர் 15 ஆம் திகதி சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தினத்துக்கு சற்று முன்பின்னாகவோ அல்லது ஒக்ரோபர் 15 ஐ மையமாகக்கொண்டு அந்த வாரம் முழுவதுமாகவோ இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படும் வழக்கமும் உண்டு. முக்கியமாக இரண்டு நோக்கங்களை மையமாகக் கொண்டே வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அவையாவன –

வெள்ளைப் பிரம்பு பற்றியும் அதன் தாற்பரியங்கள் பற்றியும் பொது மக்களுக்கு அறிவுறுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் விழிப்புலனற்றோருக்கு பாதுகாப்பைப் பெற்றுக்கொடுத்தல்.

விழிப்புலனற்றோர் தொடர்பான மூட நம்பிக்கைகளைக் களைவதன் மூலமும் அவர்களுக்கான நலத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் அவர்களுக்கு நல்லதோர் வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

புகழ்பூத்த அமெரிக்க ஜனாதிபதியான பரக் ஒபாமா 2011 ஆம் ஆண்டு இந்த சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை அமெரிக்க விழிப்புலனற்றோரின் சமத்துவத்துக்கான தினமாகவும் பிரகடனப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் நாடளாவிய ரீதியாக ஒக்ரோபர் மாதம் முழுவதுமே வெள்ளைப் பிரம்பு தொடர்பாகவும் விழிப்புலனற்றோரின் சமத்துவம் தொடர்பாகவும் பல்வேறு நிகழ்வுகள், செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்திலே நாம் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவை:

யாரேனுமொருவர் வெள்ளைப்பிரம்பைக் கையில் பிடித்திருந்தால் அவர் ஒரு பார்வையற்றவர் அல்லது குறைந்த பார்வையுடையவர் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

வெள்ளைப்பிரம்பு பார்வையற்றோரின் அடையாளச் சின்னமாக சர்வதேச ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அதன் உதவியோடு சுயமாக வீதியில் நடமாடுவதற்கு விழிப்புலனற்ற எவருக்கும் உரிமையுண்டு என்பதையும் மதித்துணரவேண்டும்.

வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவருக்கு வீதியில் முதலில் நடந்துசெல்லும் உரிமை, வீதியை முதலில் கடக்கும் உரிமை என்பன உண்டு என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டம்.

வெள்ளைப் பிரம்பை ஒருவர் இரண்டாக மடித்து வீதியின் குறுக்கே காட்டினால் அவர் வீதியைக் கடக்க முயல்கிறார் என்பதையும் நான்காக மடித்து உயர்த்திக் காட்டினால் அவர் யாதேனும் ஒரு வாகனத்தை மறிக்க முயல்கிறார் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவர் யாதேனும் ஓர் உதவியை நாடினால் அல்லது அவர் ஓர் ஆபத்தான சூழ்நிலையில் இருந்தால் தயங்காமல் அவருக்கு உதவ முன்வரவேண்டும்.

இயல்பான சூழ்நிலையில் வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்வோருக்கு இடையூறு எதுவும் ஏற்படாதவாறு சக பாதசாரிகளும் வாகன ஓட்டிகளும் நடந்து கொள்ளவேண்டும்.

இந்த சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்திலே எம்முள் உறங்கிக் கிடக்கும் மனித நேயத்தை நாம் ஒவ்வொருவரும் தட்டியெழுப்பவேண்டும். இந்த மண்ணில் பிறந்த மனிதர்கள் அனைவரும் வாழப் பிறந்தவர்களே என்ற மகோன்னத உண்மையை நாம் உணர்ந்து கொண்டால் அதுவே இந்த சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தின் வெற்றியாக அமையும்.

**ஆக்கம் - திருமதி மோகனவதனி ரவீந்திரன்,**
**உப அதிபர்,**
**யா/மகாஜனக் கல்லூரி.**

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** எங்கு பார்த்தாலும் பரபரப்பாய் ‘பொன்னியின் செல்வன்’ திரைப்படம் பற்றியே பேசுகிறார்கள். நீங்கள் அதனைப் பார்க்கச் செல்லவில்லையா?

**பதில்:-** படம் வந்த இரண்டாம் நாளே பார்த்துவிட்டேன். முன்னாள் மாகாணசபை உறுப்பினரும், எங்கள் கழகத்தின் ஆதரவாளருமான நண்பர் குருசாமி அவர்களின் புண்ணியத்தால் அக்காரியம் நடந்தேறியது.

பலரும் இன்று அந்தப் படத்தைப் பற்றிப் பெரிதாய்ப் பாராட்டுகிறார்கள். எனக்கென்னவோ அந்த அளவிற்கு அப்படத்தை உயர்வாய்ச் சொல்லத் தோன்றவில்லை. ‘கல்கி’ என்கின்ற அந்த தனி ஒருமனிதனின் சிந்தனையில் பிறந்த விரிவான கற்பனைக்கு அருகில் கூட படம் போனதாய் நான் சொல்லமாட்டேன். கல்கி அக்கதையினூடு வாசகர்களை சோழர் காலத்திற்கே அழைத்துப் போய்விடுவார். அந்த விடயத்தில் மணிரத்தினம் தோற்றுவிட்டார் என்றே தோன்றுகிறது.

எனக்கேற்பட்ட ஆச்சரியம் என்னவென்றால், ‘கல்கி’ என்கின்ற ஒரு தனிமனிதன், படிக்கிற வாசகர்களின் மனம் முழுவதையும் ஈர்த்தெடுத்த விதமும், தான் படைத்த ஒவ்வொரு பாத்திரத்திற்கும் எழுத்தினாலேயே தனித்தனி வடிவம் கொடுத்த அழகும், வரலாற்றால் கதையோ கதையால் வரலாறோ சிதைவுறா வண்ணம் அந்தக் கதையில் வரலாற்றை உள் நுழைத்த நுட்பமும், வார்த்தைகளுக்கு அடங்காத ஆச்சரியங்கள்.

ராஜராஜசோழன் என்கின்ற ஓர் பேரரசனின் கதையில் அவனைக் கதாநாயகனாக்காமல், வந்தியத்தேவன் என்கின்ற ஒரு சாதாரண வீரனைக் கதாநாயகனாக்கி, கதையை நகர்த்திய துணிவு கல்கியைத் தவிர வேறெவருக்குவரும்?கொஞ்சமேனும் இலக்கியப் பரீட்சயம் உள்ள ஒருவன் ஒருசில பக்கங்களைப் படித்துவிட்டாலே காந்தம் போல் ஈர்த்துக் கொள்கின்ற கல்கியின் பொன்னியின் செல்வன் எங்கே? மணிரத்தினத்தின் படம் எங்கே?

கல்கி என்ற மனிதர் ஒரு பேனாவையும் சில தாள்களையும் வைத்துக் கொண்டு செய்த அற்புத வித்தையை




நிவர்த்திக்க இந்தப் படத்தில் டைரக்டர், கதாசிரியர், ஒளிப்பதிவாளர், இசையமைப்பாளர், காட்சியமைப்பாளர் என பலபேர் சேர்ந்து முயற்சித்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் வெற்றி பெற்றார்கள் என்று சொல்ல முடியவில்லை.

ஐந்து பாகமாய் எழுதப்பட்ட ஒரு நாவலை, மூன்று மணிநேரத்திற்குள் படமாய்க் காட்டுவதில் உள்ள சிரமத்தை நீங்கள் உணரவில்லை என்று உங்களில் சிலர் சொல்வீர்கள். அதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். கொத்தமங்கலம் சுப்புவால் எழுதப்பட்ட ‘தில்லானா மோகனாம்;பாள்’ என்கின்ற விரிவான கதையை, அக்கதைக்கு நிகராகப் படமாக்கி வெற்றி கண்டு இயக்குனர் ஏ.ப.நாகராஜன் சாதித்ததை நாம் மறந்துவிட முடியாது. அதனால் ஒரு நாவலை முழுமையாய்ப் படமாக்க முடியாது என்ற வாதத்தை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

அப்படியானால் பொன்னியின் செல்வன் இவ்வளவு வெற்றி பெற்று ஓடுகிறதே. அது எப்படி என்பீர்கள்? அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஏற்கனவே பல நல்ல படங்களைத் தந்த மணிரத்தினம் என்கின்ற இயக்குனரின் பெயர் முத்திரை அதில் ஒன்று. புகழ் பெற்ற நடிகர்களின் இருப்பு மற்றொன்று. உலகப் புகழ் பெற்ற இசையமைப்பாளரின் இசை முயற்சி இன்னொன்று. பிரமாண்டமான படங்களைத் தயாரிக்கும் ‘லைக்கா’ நிறுவனத்தின் மீதான ரசிகர்களின் எதிர்பார்ப்பு வேறொன்று. இவையெல்லாம் சேர்ந்துதான் படத்தை இந்த அளவு உயர்த்தியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

அண்மைக்காலமாகச் சினிமாப் படங்கள் ஓடுகின்றன என்பதைவிட, ஓடவைக்கப்படுகின்றன என்பது தான் உண்மை என்கிறார்கள். அந்த உண்மை இந்தப் படத்தின் வெற்றிக்கும் காரணமாய் இருந்திருக்கிறது. இதைவிட உலகளாவி தமிழர்களுக்கு தம் இனத்தின் வரலாறு மேல் ஏற்பட்டிருக்கிற புதிய ஆர்வமும் இப்படத்தை நோக்கி அவர்களை இழுத்திருக்கிறது என்றும் சொல்லலாம்.

பிரச்சினை என்னவென்றால், பொன்னியின் செல்வன் கதையை வாசிக்காதவர்களுக்கு இப்படம் பெரிய அளவில்; விளங்கப்போவதில்லை. வாசித்தவர்களுக்கோ இப்படம் திருப்தி தரப்போவதில்லை. அண்மைக்காலத்தில் வெளியாகி ஒரு கலக்குக் கலக்கிய ‘பாகுபலி’ எனும் படத்தில் வந்த பிரமாண்டம், இசையமைப்பு, காட்சியமைப்பு, கற்பனைவளம் என்பவற்றோடு ஒப்பிடாமல் இப்படத்தைப் பார்க்கமுடியவில்லை என்பது இன்னொரு பிரச்சினை.

காட்சிகளை இருள் தன்மையோடு அமைப்பது, மணிரத்தினத்தினுடைய வழக்கமாகிவிட்டது. இப்படித்திலும் அதையே கடைப்பிடித்திருக்கிறார். முக்கியமான காட்சிகளில் வரும் அந்த இருட்டால், திரையில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் பல இடங்களில் குழம்பவேண்டி இருக்கிறது.

கரிகாலச் சோழனாய் வரும் விக்ரம் பல இடங்களில் ஒரு மனநோயாளியைப் போல் வடிவமைக்கப்பட்டிருக்கிறார். அவர் ஆடும் கூத்துப் போன்ற நடனமும், வீறிடல்களும் அப்பாத்திரத்தை கீழிறக்கி விடுகின்றன. பொன்னியின் செல்வன் நாவலில் வரும் கதாநாயகனான வந்தியத்தேவன், நகைச்சுவை உணர்வுள்ள ஓர் ஆளுமையாளன். அப்பாத்திரமாய் வரும் கார்த்தியில் அந்த நகைச்சுவைத் தன்மை பதிவாகியிருக்கிறது. ஆனால் அப்பாத்திரத்தில் பொதிந்திருந்த ஆளுமை அவரிடத்தில் வந்ததாய்த் தெரியவில்லை.

அதுபோலவே, நாவலில் வரும் குந்தவைப் பாத்திரம் அழகும், பெரிய அறிவாற்றலும் உள்ள பாத்திரம். அப்பாத்திரமாய் வரும் திரிா அப்பாத்திரத்திற்குரிய அழகோடு இருக்கிறார். ஆனால் அவரிடத்தில் அந்த அறிவாற்றல் தன்மை வெளிப்படவில்லை. அந்த விடயத்தில் நந்தினியாய் வரும் ஐஸ்வர்யாராயின் பொருத்தப்பாடு நன்றாய் இருக்கிறது.

நாவலில் ஆழ்வார்க்கடியான் எளிமை வடிவும் அறிவாற்றலும் கொண்ட ஒரு பாத்திரம். அப்பாத்திரத்தை நகைச்சுவைக்காக அளவுக்கதிகமாகக் கீழ் இறக்கி விட்டாற்போல் தோன்றுகிறது. கவுண்டமணி, செந்தில் அளவில் வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் நடந்து கொள்வது பொருத்தமாய் இல்லை. கதாநாயகனாகவே பார்க்கப்பட்ட ஜெயராம் ஆழ்வார்க்கடியானாய் உள்வாங்கப்பட சற்று இடர் செய்கிறார். அருண்மொழித் தேவராய் வந்த ஜெயம்ரவி ஓரளவு திருப்தி செய்கிறார். பழுவேட்டையர்களும் பரவாயில்லை.

ரகுமானின் இசையைப் பலரும் பாராட்டுகிறார்கள். எனக்கென்னவோ அவரது இசை தனியே கேட்க நன்றாக இருக்கிறதேயன்றி, ஒரு வரலாற்றுப் படத்தோடு பொருந்துவதாய்த் தெரியவில்லை. அதுபோலத்தான் அமைக்கப்பட்டிருக்கும் நடனங்களும் கூட அமைந்திருக்கின்றன. பாத்திரங்களை ஏற்றிருக்கும் பிரபல நடிகர்களின் தனி அடையாளங்கள் மேலோங்கி நின்று, கதாபாத்திரங்களை உள்வாங்கலில் இடைஞ்சல் செய்கின்றன. ஏலவே அடையாளப்படுத்தப்பட்ட நடிகர்களை தவிர்த்திருந்தால், பாத்திரங்கள் மனதில் பதிவது சுலபமாக இருந்திருக்கும்.

மணிரத்தினத்தின் தனி முத்திரைகள் சில இல்லாமலில்லை. அமைக்கப்பட்டிருக்கும் பிரமாண்டமான காட்சிகள் சில ரசிக்க வைப்பதும் உண்மையே. ஜெயமோகனின் வசனங்களில் அமைந்த கூர்மை இப்படத்திற்குக் கிடைத்திருக்கும் ஓர் ஆறுதல் பரிசு. எனக்கென்னவோ வெளி வரப்போகும் இரண்டாம் பாகம் பெரிய வெற்றியைத் தரப்போவதில்லை என்றே தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியாருக்கு பட விமர்சனம் கூட செய்யத்தெரிந்திருக்கிறதே! ‘வெல்டன்’ வாரிதியார்.**

**2. கேள்வி:-** அண்மையில் நடந்த தி.மு.க. பொதுக்குழு மாநாட்டில் பேசிய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், தன் கட்சியின் மூத்த உறுப்பினர்களால் தனது நிம்மதி போகிறது என்றும், காலையில் எழும்பும் போது எவர் என்ன பிரச்சினையை உண்டாக்கி வைத்திருப்பாரோ என்று பயந்து கொண்டுதான் தான் எழும்ப வேண்டி இருக்கிறது என்றும் பேசியதைக் கேட்டீர்களா? அவர் கட்சிக்காரர்கள் அப்படி என்னதான் பேசி அவரைக் குழப்புகிறார்கள்?

**பதில்:-** தொடர்ந்து இணையத்தளங்களைப் பார்த்து வந்தால் அவரின் கட்சிக்காரர்கள் அடிக்கிற கூத்தைத் தினம் தினம் காணலாம். உள்ளுக்குள் ஆன்மீகவாதிகளாய் இருந்துகொண்டு, வெளியில் தம்மை நாத்திகர்களாய்க் காட்ட அவர்கள் செய்யும் அநியாய முயற்சிகளுக்கு ஓர் அளவில்லை. முக்கிய அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் தாங்கள் மத நம்பிக்கை அற்றவர்கள் என்று காட்டுவதற்காய், சமயக் கிரியைகளை இழிவு செய்து வருகிறார்கள். குறிப்பிட்டுச் சொல்வதானால், இந்துமதத்தை இழிவு செய்வதில் அவர்கள் காட்டும் தீவிரம் பலரையும் முகஞ்சுழிக்க வைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில், ‘நாத்திகர்கள்’ தங்கள் விருப்பப்படிதான் எல்லோரும் நடக்கவேண்டும் என்றாற்போலப் பேசியும் எழுதியும் மற்றவர்களை மிரட்டி வருகிறார்கள். ஆரம்பக் காலத்திலிருந்து திராவிடர் கழகங்களின் பாணி அப்படியாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அன்று அவர்களின் சண்டித்தனத்திற்குப் பயந்து ‘ஆத்திகச்’ சான்றோர்கள் ஒதுங்கிப் போனார்கள். இனி அப்படி நடக்காது என்று தோன்றுகிறது.

மிரட்டல்களால் மற்றவர்களைப் பணிய வைக்கலாம் என்று நினைக்கும் நாத்திகர்களின் எண்ணம் உடையத் தொடங்கிவிட்டது. அவர்களின் மிரட்டல்களுக்கு ‘ஆத்திகர்கள்’ அஞ்சியகாலம் மெல்ல மெல்ல மலையேறி வருகிறது. அது தெரியாமல் இன்றும் மிரட்டல் பேச்சுக்களால் மற்றவர்களை அடிபணிய வைக்க நினைக்கும் இத்தகையவர்களால் தனது கட்சிக்கான ஆதரவு வீழப்போகிறது என்ற அச்சத்தில்த் தான் முதலமைச்சர் ஸ்டாலின் அப்படிப் பேசினார் என்று நினைக்கிறேன்.

தன் கட்சியைச்சார்ந்த அமைச்சர்கள் உள்ளிட்ட பல உறுப்பினர்களின் இத்தகை நடவடிக்கைகளால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைப் பொதுமக்கள் வெறுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நாத்திகக் கொள்கையுள்ள கட்சி என்று தெரிந்தும்கூட, ஆத்திகர்கள் பலர் அக்கட்சிக்கு மொழிப்பற்றால் இதுவரை ஆதரவளித்து வந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 150

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தேவையான சுய விமர்சனங்கள்

**முதலில் ஒரு சிறு திருத்தம்.**

கருணா சம்பந்தப்பட்ட பதிவில் பரந்தன் ராஜனைக் குறித்து நேற்று முன்தினம் நான் எழுதியவை பற்றி சில விளக்கங்கள் தரப்பட்டன. ராஜன் 'த்ரீ ஸ்டார்' இயக்கத்தில் இணைந்து செயல்படவில்லை. அதன் உருவாக்கத்திலும் ஈடுபடவில்லை. அவர் 1986இல் லெபனானில் பயிற்சிகள் முடிந்து சென்னை திரும்பிய போது புளொட்டின் உமா மகேஸ்வரனுடன் எழுந்த கருத்து வேற்றுமைகளால் ஈழ மக்கள் ஜனநாயக விடுதலை முன்னணி (சிஹிம்ஸிய்) எனும் அமைப்பைத் தொடங்கி, அதன் பெயரில் இயங்கிக் கொண்டிருந்தார் எனவும், இந்தியப் படைகள் 1990 இல் இலங்கையிலிருந்து திரும்பிய போது அவர்களோடு திரும்பிவிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. 'த்ரீ ஸ்டார்' என்ற பெயர் பலமாக அடிபட்டதே என வினவிய போது. அது, தாங்கள் அதில் இல்லாவிட்டாலும் பொதுவாக எல்லோரையும் குறித்து எழுதப்படுவது, அதுவும் விடுதலைப் புலிகள் 1995இல் வன்னிக்குச் சென்றபின் 'இந்திய ஒட்டுக் குழு' என்று அல்ல 'ஸ்ரீலங்காவின் ஒட்டுக்குழு' என்று சொல்லப்பட்டார்கள் எனத் தெரிவித்தனர்

இப்படியாக ஒட்டுக் குழுக்கள் என அடையாளப்படுத்தப்பட்டு, இனத்தின் பெயரால் இறந்தவர்கள் எவ்வளவு பேர்?

பரமதேவா இறந்தமை தொடர்பிலும் ஒரு திருத்தம். அவர் ஒரு வங்கிக் கொள்ளை முயற்சியின் போது இறந்தார் எனக் குறிப்பிட்டு விட்டேன்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களுக்கான தளபதியாக பஷீர் காக்கா இருந்த போது, அந்த மாவட்டங்களின் தாக்குதற் படைத் தளபதியாக இருந்தவர் பரமதேவா. களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் மீது பஷீர் காக்கா மற்றும் பரமதேவா ஆகியோரின் தலைமையில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலின் போதே பரமதேவா அவர்கள் இறந்தார். வங்கிக் கொள்ளை முயற்சியின் போது என்பதுதவறுஎனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"சில நிமிடங்களின் முன்னர் எம்மோடு பேசிக்கொண்டிருந்த மைக்கேல் இப்போது எம்முடன் இல்லை. இதயம் கனத்தது. தமிழீழக் கனவுக்காக இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டோம்' – என கணேசன் (ஐயர்) மனமுருகிப் பதிவிடுகிறார்.

கண்ணாடி பத்மநாதன், மைக்கேல்... அதனைப் போல எவ்வளவோ பேர்கள் தங்கள் உயிர்களை தந்திருந்தாலும், அவர்களுக்கு அஞ்சலிகள் வைக்கப்படுவதில்லை. அவர்கள் தங்களது உயிர்களை இப்படியாக இனத்தின் விடுதலைக்காகப் புறப்பட்டு இறந்தார்கள் என யாரும் நினைவு கூருவதும் இல்லை. அதேபோல்தான் பின்னர் அதிகாரங்களுக்காக விடுதலை குழுக்கள் இடையேயும் குழுக்களில் தங்களுக்குள்ளேயே எவ்வளவோ உள்கொலைகள் நடந்தன. அவையெல்லாம் நாமப் பட்டைகளால் மறைக்கப்பட்டன. தமிழீழக் கனவுகளுக்காக இவற்றையெல்லாம் தமிழ் மக்கள் தாங்கிக் கொண்டார்களா? அன்றில் திராணியற்று வாளவிருந்தார்களா?

எதுவோ, பிரசாரங்களினால் கானல் தேசம் ஒன்று கண்முன்னே ஆடியதால் அதற்காக எதுவும் சரி என்ற யதார்த்தம் ஆழமாகவும் ஓடியது. தமிழ் சமுதாயம் இவற்றைச் சுய விமர்சனம் செய்து தமக்குள்ளேயே நல்லிணக்கம் ஏற்படுத்திக் கொள்ளாத வரை விமோசனமும் கானல் நீராகத்தான் இருக்கும்.



கருணாவின் பிளவுகளும் இப்படியான காரணங்களால் தான் நடந்தன. ஒரு நாட்டுக்குள் அமைதித் தீர்வவை இணக்கப் பேச்சுக்களை தொடர்ந்து அடைய வேண்டும் என்று மத்திய குழுவை வற்புறுத்தியமைக்காகக் கட்டுப்பாட்டை மீறுகிறார் என்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா அன்றில் விடுதலை புலிகள் குறிப்பிட்டவாறு இயக்கத்துக்கு எதிரான துரோகங்களை முன்னெடுத்தாரா, எதுவானாலும் விடுதலை புலிகளின் ஆக்க வரம்பு முறைகளுக்கும் உட்கட்டுப்பாடுகளுக்கும் அவை மாறாகவே இருந்தன.

ஒன்று – தமிழீழம் அமையும் வரை இயக்கம் கலைக்கப்பட மாட்டாது.

இரண்டாவது – இயக்கத்தில் இருந்து விலகி வேறு அமைப்பில் இணைந்தாலோ அல்லது வேறு அமைப்புகளை ஆரம்பித்தாலோ



மரண தண்டனை என்பது.

இவை அமுல்படுத்தப்படுபவை என்பதைத் தெரிந்து கொண்டும் கருணா தான் மத்திய குழுவினரோடும் பிரபாகரனோடும் பேசியதில் அவர்கள் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடப் போவதில்லை என்பதில் திடமாக உள்ளார்கள் என்பன போன்றவற்றை ஸ்ரீலங்கா அரசுக்கும் நோர்வே பேச்சாளர்களுக்கும் கருணா தெரியப்படுத்தியவை சமாதான முயற்சிகளில் ஆழ்ந்த தாக்கங்களை ஏற்படுத்தின. விடுதலைப் புலிகள் உத்தரவாதம் அளித்தபடி ஒரு நாட்டிற்குள்ளான தீர்வுக்கு ஒத்து வருவார்களா என்பதில் பலத்த கேள்விக்குறிகள் சர்வதேசத்துக்கு எழுந்தன. இதில், மதியுரைஞர் அந்நியப்படுத்தப்பட்டமையும் சேர்ந்து, அவற்றை உறுதிப்படுத்தின.

விடுதலைப் புலிகளின் கைகள் அரசியல் ரீதியாக ஓங்க, கருணா கேட்ட பிரதிநிதித்துவம் சமாதான பேச்சாளர்களால் அவருக்கு வழங்கப்படவில்லை. கருணா, தமது ஆதரவுத் தளங்களுக்காக ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனேயே இயங்க வேண்டி இருந்தது.

**மீண்டும் பேச்சு வார்த்தைகள்**

அதேசமயம் நாடாளுமன்றத் தேர்தலிலும் சந்திரிகாவினது கட்சி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பெரும்பான்மையானது. சந்திரிகாவின் கூட்டு 102 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 82 ஆசனங்களையும் பெற்றன. சந்திரிகாவின் 102 ஆசனங்களில் இந்த தேர்தலில் ஜே.வி.பிக்கு 39 ஆசனங்கள் கிடைத்தன. அவர்கள் (ஜே.வி.பி.) சந்திரிகாவுடன் தேர்தல் கூட்டு வைத்திருந்தாலும் சமாதானப் பேச்சுக்களில் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கவில்லை. அதேசமயம் புதிதாக பதியப்பட்ட சிங்கள தீவிரவாத கட்சி ஜாதிக ஹெல உறுமய ஒன்பது ஆசனங்களைக் கைப்பற்றியது. சிங்களத் தீவிரவாத கட்சிகள் யாவும் ஜனாதிபதி சந்திரிகாவை பேச்சு வார்த்தைகளைத் தொடங்க வேண்டாம் எனவும், கருணாவின் பிளவுகளால் விடுதலை புலிகள் பலம் குறைந்த நிலையில் உள்ளமையால் இராணுவ ரீதியாக அவர்கள் அடக்கப்பட வேண்டும் என நின்றாலும், சந்திரிகா பேச்சு வார்த்தையை தொடர்வதில் விருப்பம் காட்டினார்.

விடுதலை புலிகளின் இடைக்கால நிர்வாக அமைப்புக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு இல்லாத நிலையிலும், கருணாவின் பிளவு அவர்களது இராணுவ கட்டமைப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தியதில், பின்தங்கிய நிலையிலே சமாதான பேச்சுவார்த்தைகளை அணுக வேண்டும் என விடுதலை புலிகள் கணித்தாலும், அவர்களும் போரை எதிர்கொள்வதை தவிர்த்து, சமாதான பேச்சுகளுக்கு உடன்பட்டார்கள்.

இரண்டு பகுதிகளுமே பேச்சுவார்த்தைகளில் அடக்கப்பட வேண்டியவை. எங்கு, எப்போது என்ற இழுபறிகளில் காலம் கடத்தினர். விடுதலைப் புலிகள் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அடிப்படையில் பேச்சுக்கள் தொடங்கப்பட வேண்டும் எனவும், அவை வெளிநாடுகளில் நடைபெற வேண்டும் எனவும் நிபந்தனைகள் வைத்தார்கள். ஜனாதிபதி சந்திரிகாவோ விடுதலைப் புலிகளின் இடைக்கால கட்டமைப்பை கணக்கெடுக்க முடியாது என ஒரேயடியாக நிராகரிக்காமல், அதனை முடிந்த முழுமை பெறும் தீர்வின் அடிப்படையில் அது வரும் நேரத்தில் பார்வையிடலாம் என்றதோடு, பேச்சு வார்த்தைகளை கொழும்பில் அல்லது வன்னியில் நடத்தலாம் என அபிப்பிராயப்பட்டார்.

கருணாவின் பிளவுகளால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மாற்றங்கள் சிலவற்றை ஜனாதிபதி சந்திரிகா வேண்டினாலும் விடுதலைல் புலிகள் அதற்கு ஒத்துவரவில்லை.

அக்டோபர் 2004 இல் ஜனாதிபதி 'சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனை குழு'வை ஏற்படுத்தினாலும், அது மக்களிடையே போதுமான ஆர்வத்தை ஏற்படுத்தவில்லை.

நவம்பர் 2004 இல் பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையும் நாடு யுத்தத்தை நோக்கிப் போவதாகக் காட்டியது. வடக்கு, கிழக்குப் பகுதித் தகவல்களும், புலம்பெயர் செயற்பாட்டினரது அறிவித்தல்களும், விடுதலைப் புலிகள் பெருமளவு நிதிகளும், ஆள் சேர்ப்பும் நடத்துகிறார்கள் என்றும் இறுதி யுத்தத்திற்கு தயார் செய்கிறார்கள் என்ற செய்திகளைத் தருவனாகப் பார்க்கப்பட்டன. அப்படியான யுத்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தாலும் எதிர்பாராதவை அவற்றை இரு பகுதிகளுக்குமே மாற்றி அமைத்தன.

அது யாது என்பதை நாளை பார்ப்போம்.

(வளரும்....)

# கொழும்பு - தாமரை கோபுரத்துக்கான மொத்த செலவு 1,600 கோடி ரூபாவாம்!

கொழும்பு - தாமரை கோபுரத்துக்காக 1600 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா தெரிவித்துள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு பகிர்ந்துகொண்ட தகவலைத் தொடர்ந்து இந்த சர்ச்சைக்குரிய தாமரைக் கோபுரத் திட்டத்தின் செலவு விவரங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள தகவல்கள், தாமரை கோபுரத்தின் டிசெம்பர் 31 வரையிலான காலத்துக்குரிய மொத்த செலவை உள்ளடக்கியுள்ளது.

அந்தத் தகவல்களுக்கமைய, ஒரு கோடியே 13 லட்சத்து 600 அமெரிக்க டொலர்கள் கட்டுமான செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளன.

அத்துடன், ஆலோசனைக் கட்டணமாக 33 கோடியே 74 லட்சத்து 85 ஆயிரத்து 20 ரூபாவும் கடன் உறுதி மற்றும் நிர்வாகக் கட்டணங்களுக்காக 22 கோடியே 23 லட்சத்து 69 ஆயிரத்து 357 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

தண்ணீர் மற்றும் மின்சாரம் வழங்குதல் ஆகிய செலவினங்கள் உள்ளடங்களாக இதர செலவுகளுக்காக மொத்தம் 34 கோடியே 42 லட்சத்து 15 ஆயிரத்து 750 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிலத்துக்கான கட்டணமாக 2கோடியே 250 லட்சம் ரூபாவும் காப்பீட்டுக்



கட்டணமாக 8,665,612 அமெரிக்க டொலரும் செலுத்தப்பட்டுள்ளது.

## மிளகாய்தூள் தூவி கசினோ நிலையத்தில் பணத்தைக் கொள்ளையிடுவதற்கு முயற்சி!

கொள்ளுப்பிட்டி, சாகர வீதியில் அமைந்துள்ள கசினோ நிலையம் ஒன்றில் 27 லட்சம் ரூபா பணத்தை மிளகாய் பொடியைத் தூவி கொள்ளையிட முயன்ற சம்பவம் தொடர்பில், கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த திங்களன்று மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை மையப்படுத்தி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

குறித்த கசினோ நிலையத்திலிருந்து 27 லட்சம் ரூபா பணத்தை, அருகே உள்ள அந்த நிலையத்தின் அலுவலகம் ஒன்றுக்கு பெண் ஊழியர் ஒருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருடன் எடுத்துச் சென்றுள்ளார். பணம் அடங்கிய பெட்டி பாதுகாப்பு உத்தியோகத்தரின் கைகளிலேயே இருந்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் அருகே காத்திருந்த இருவர், திடீரென வந்து மிளகாய் பொடி தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

பின்னர் பணப் பெட்டியை பறிக்க முற்பட்ட போது, பாதுகாப்பு உத்தியோகத்தர் பணப் பெட்டியாலேயே சந்தேக நபரை தாக்கியுள்ளார். இதன்போது பெட்டியிலிருந்த பணம் பாதையில் சிதறியுள்ளது.

இந் நிலையில், கொள்ளையிட வந்த சந்தேக நபர்கள் தாம் வந்த மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர்.

இந் நிலையிலேயே இது தொடர்பாகக் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## உயிருடன் மீட்கப்பட்ட இரண்டு சிறுத்தைப்புலி குட்டிகள் தாய் சிறுத்தையுடன் சேர்க்கப்பட்டன!

ஹற்றன் - டிக்கோயா இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் உயிருடன் மீட்கப்பட்ட இரண்டு சிறுத்தைப்புலி குட்டிகளை தனது தாய் சிறுத்தைப்புலியுடன் வனவிலங்கு அதிகாரிகள் சேர்த்துள்ளனர்.

பிறந்து பத்து நாள்களே ஆன உடல் ஆரோக்கியத்துடன் ஆண் மற்றும் பெண் என இரண்டு சிறுத்தைக் குட்டிகள் இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் தேயிலை மலையில் அடிப்பகுதியில் இருப்பதை வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் கண்டுள்ளனர்.

இதயடுத்து வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிறுத்தைப்புலி குட்டிகளை பாதுகாப்பாக மீட்டு தாய்புலிக்கு கொண்டு செல்ல தேவையான நடவடிக்கையை எடுத்தனர்.

அதனையடுத்து சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு தாய் சிறுத்தை தனது குட்டிகளை வனப்பகுதிக்கு எடுத்து சென்றதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## பாட்டும் நானே? .......

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அவர்களின் மனதையும் இத்தகைய வீணர்களின் செயல்கள் மாற்றத் தொடங்கி விட்டது போல்த் தெரிகிறது. தமிழ்நாடு பா.ஜ.க. தலை வர் அண்ணாமலைக்கு கூடும் கூட்டமே இதற்குச் சான்று என்று பலரும் சொல்கிறார்கள். இதனால்த் தான், அண்மையில் நடந்த தி.மு.க. மாநாட்டில், பொதுமக் களை வெறுக்கச் செய்யும் இத்தகையவர்களின் தேவையில்லாத சீண்டல்களை முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களே வெளிப்படக் கண்டித்திருந்தார்.

புதிதாக அரச பொறுப்பேற்றிருக்கும் முதலமைச் சர் ஸ்டாலின் அவர்கள், புரட்சிகரமான பல முடிவுகளை எடுத்து மக்கள் மனதை ஓரளவு ஈர்த்து வருகிறார். அவரை நோக்கி, ஓர் விண்ணப்பத்தை முன்வைக்க வேண்டி இருக்கிறது. தமிழ்நாடு அரசர்களாலும் வள் ளல்களாலும் அடியார்களாலும் புலவ ர்களாலும் ஆன்மீகத் தளமாய் ஆக்கப்பட்ட ஓர் இடம். அம்மண்ணில் வாழும் மக்களை, எவராலும் ஆன்மீகப் பாதையிலிருந்து விலகிச் செல்ல வைக்க முடியாது என்பது மட்டும் உறுதி. முதலமைச்சரின் துணைவியார் அவர்கள் செய்துவரும் பரவலான வழிபாடுகளே அக்கருத்திற்கான சான்றாய்த் திகழ்கிறது.

முன்பு, பெரியாரை விட்டுப்பிரிந்த ‘அண்ணா’ அவர்கள், ‘கடவுள் இல்லை’ என்று இருந்த கொள்கையை மாற்றி ‘ஒன்றே கடவுள் ஒருவரே தேவன்’ என்று புதிய நிலைப்பாட்டை எடுத்திருந்தார். அக்கருத்து மக்கள் மத்தியில் ஏற்கப்பட்டது. இன்றைய நிலையில் புதிய முதல்வர் அவர்களும் ‘நாத்திகம்’ என்னும் பழைய கயிறைப் பிடித்துக் கொண்டு தொங்காமல் மண்ணின் யதார்த்தத்தை உணர்ந்து, ஆத்திகக் கொள்கையைத் தி.மு.க. வின் கொள்கையாய் அறிவிப்பாரானால், மக்கள் மனதை உணர்ந்த முதல்வராய் அவர் போற்றப்படுவார். உலகத் தமிழ் மக்கள் முதல்வரிடம் இப்புரட்சியை எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் இப்ப பா.ஜ.க. வுக்கு ஆள் சேர்க்கிறாரோ?**

**3. கேள்வி:-** தேவையில்லாமல் ரஷ்யாவை ‘நோண்டப்போய்’ இப்ப அடிவாங்கி உக்ரெயின் குளறுவதைப் பார்த்தீர்களா?

**பதில் :-** அவளைத் தொடுவான் ஏன்? கவலைப்படுவான் ஏன்?

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாற்ற பழமொழியைப் பாருங்கோ!**

## பல வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்ட அரிசி கால்நடைத் தீவனத்துக்காகப் பயன்படுத்தப்படும்!

### நிதியமைச்சு அறிவிப்பு

பல்வேறு காரணங்களுக்காக துறைமுகத்தில் சுங்கத் திணைக்களத்தில் அடைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட அரிசி கால்நடைத் தீவனத்துக்காகப் பயன்படுத்தப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

பல ஆண்டுகளாக துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் உள்ள 10 லட்சம் கிலோ அரிசியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, குறித்த அரிசி கால்நடைத் தீவனத்துக்காகப் பயன்படுத்தப்படும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அரிசி காலாவதியாகும் திகதி காரணமாக அது மனித பாவனைக்குத் தகுதியற்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டில் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம்: கணக்காய்வாளர் நாயகம் ஊடாக சிறப்பு விசாரணை

முன்னாள் ஜனதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டப்ளியூ.பி.சி. விக்ரமரத்ன தெரிவித்தார்.

பிரதி கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் கணக்காய்வாளர்கள் குழாம் ஒன்று இதற்காக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.


2022 ஜூலை 4 ஆம் திகதியிடப்பட்டதாக ‘இலங்கையின் நிதி முகாமைத்துவம் மற்றும் பொதுக் கடன் கட்டுப்பாடு தொடர்பிலான சிறப்பு கணக்காய்வு அறிக்கை 2018 - 2022’ எனும் தலைப்பின் கீழ் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் கணக்காய்வாளர் நாயத்துக்கு கடந்த 7 ஆம் திகதி உத்தரவிட்டது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை 203 ரூபாவாக பேண நாணயச் சபை எடுத்த தீர்மானம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள ஏற்பட்ட கால தாமதம் மற்றும் அதனுடன் தொடர்பு டைய விடயங்கள் கடந்த 2022 ஜனவரி 18 ஆம் திகதி முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட சர்வதேச பிணை முறி பத்திரங்கள் தொடர்பில் 50 கோடி அமெரிக்க டொலர்களை செலுத்தியமை மற்றும் அது சார்ந்த விடயங்கள் மேற்சொன்ன நடவடிக்கைகள் மற்றும் செலுத்துகைக ளால் மத்திய வங்கிக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பிலான கணக் காய்வு அறிக்கை ஆகியவற்றை மையப்படுத்தி அந்த அறிக்கை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அவசியம் என உயர் நீதிமன்ரம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சோள விதைகளை விடுவிப்பது குறித்து ஆய்வு

### பிரதமர் அறிவுறுத்து

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சோள விதைகளை விவசாயிகளுக்கு விடுவிப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை உடனடியாக தீர்க்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன அதிகாரிகளுக்கு பணிப்புரைவிடுத்துள்ளார்.



ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான தேசிய வழிநடத்தல் குழுவின் கூட்டம் பிரதமர் தலைமையில் இடம்பெற்றபோதே அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான சவால்கள் தொடர்பாக இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள சுகாதாரத் துறை மற்றும் விவசாயப் பிரச்சினைக ளுக்கு மேலதிகமாக, வறுமைப் பிரச்சினையை மீளாய்வு செய்தல், குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகளை உன்னிப்பாகக் கவனித்தல், உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உணவு உற்பத்தியை மேம்படுத்துதல், பருவநிலை மாற்றத்தின் சவால்களை முறியடித்தல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக பிரதமரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சோளவிதைகளில் அஃப்லடோக்சின் கலந்துள்ளதாக வதந்திகள் பரவி வருவதால் விதைகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் உத்தரவிட்டார்.

# டிஜிற்றல் மயமாக்கல் முயற்சிகள் இந்தியாவில் ஒரு ‘கேம் சேஞ்சர்’

## சர்வதேச நாணய நிதிய நிபுணர் பாராட்டு

இந்தியாவின் டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளைப் பாராட்டி, சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணர், இந்த நடவடிக்கை ஒரு ‘கேம் சேஞ்சர்’ என்று புகழாரம் சூட்டினார். ஏனெனில் இது இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படாவிடின் மிகவும் கடினமாக இருக்கும் இந்த விடயங்களைச் செய்ய முடியாதிருந்திருக்கும்..

பி.ரி.ஐக்கு அளித்த பேட்டியில் இந்தியாவின் டிஜிற்றல் மயமாக்கல் முயற்சிகள் குறித்த கேள்விக்கு பதிலளித்த சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணரான **Pierre - Olivier Gourinchas -**

“டிஜிற்றல் மயமாக்கல் பல பரிமாணங்களில் உதவுகிறது. ஒன்று நிதி உள்ளடக்கம், ஏனெனில் இந்தியா போன்ற நாடுகளில் வங்கிக் கணக்கு இல்லாத ஏராளமான மக்கள் உள்ளனர். மேலும் டிஜிற்றல் பணப்பைகளை அணுகுவது வங்கிக் கணக்கு இல்லாத அவர்கள் பரிவர்த்தனைகளில் நுழைவதற்கான ஒரு வழியாகும். ரொக்கமாகப் பணத்தைப் பரிவர்த்தனை செய்வது என்பது மிகவும் திறமையற்ற முற்சிமையாகும் என்றார்.

இது – டிஜிற்றல்மயமாக்கல் (அதாவது, டிஜிற்றலைசேன்) – மற்றபடி செய்ய மிகவும் கடினமாக இருந்திருக்கும் பல விஷயங்களைச் செய்ய இந்திய அரசாங்கத்தை அனுமதித்துள்ளது என்று நான் நினைக்கிறேன். ஆம். இது ஒரு கேம் சேஞ்சர். இது மிகவும் வரவேற்கத்தக்க வளர்ச்சியாகும் என்று கௌரிஞ்சாஸ் பரிந்துரைத்தார்..

எனவே, மக்களை மிகவும் நவீன பொருளாதாரத்திற்கு கொண்டு வருவதில் இது ஒரு பெரிய பிளஸ் பொயிண்ட் ஆகும். இது வளர்ச்சிக்கான காரணியாகும், என்று அவர் கூறினார், இந்த டிஜிற்றல் கருவியில் நீங்கள் இணைக்கப்பட்டால் உங்கள் சந்தை மிகவும் வித்தியாசமாக இருக்கும் – என்றார் அவர்.

இந்தியாவின் வியத்திலும் இரண்டாவது முக்கியமானதாக நான் கருதுவது, இந்த டிஜிற்றல் கருவிகள், பாதுகாப்பு வலையின் சில வழக்கமான குழாய்கள் மூலம் சில நேரங்களில் செய்ய மிகவும் கடினமான வழிகளில் அமைப்புகளை அடையவும் விநியோகிக்கவும் அரசாங்கங்களை அனுமதிக்கிறது என்று அவர் கூறினார்.

தொற்றுநோய், ஆற்றல் (சக்தி) நெருக்கடி ஆகிய இரண்டிலிருந்தும் நாங்கள் கற்றுக்கொண்ட பாடங்களில் ஒன்று, நாங்கள் அதை மீண்டும் கற்றுக்கொள்கிறோம், அது தேவைப்படும் இடத்தில் எவ்வாறு உதவியை வழங்குவது என்பதுதான். ஏனென்றால், அனைவரையும் உள்ளடக்கும் இத்தகைய ஒரு போர்வைக் கொள்கையை வைத்திருப்பது மிகவும் விலை உயர்ந்ததுஎன்று அவர் கூறினார்.

பெரும்பாலான மக்களுக்கு இது அவசியமில்லை மற்றும் பெரும்பாலான வணிகங்களுக்கு இது தேவையில்லை. ஆனால் சில நேரங்களில் அது அவ்வாறு செய்யப்பட வேண்டும், ஏனென்றால் (எல்லோரையும் ஒன்று படுத்தி) அதைச் செய்ய ஒரே வழி இதுவே என்று அவர் மேலும் கூறினார்.

டிஜிற்றேன் (டிஜிற்றல்மயமாக்கல்) என்பது தேவைப்படும் போது அதிக இலக்கு உதவிகளை வழங்குவதாக உறுதியளிக்கிறது. இது ஒரு கேம் சேஞ்சர் ஆகும், ஏனெனில் இப்போது கொள்கை மிகவும் சுறுசுறுப்பாக இருக்க முடியும். இது ஒட்டுமொத்த நிதி நிலைப்பாட்டின் மீது குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தும். எனவே, அதிக பாதுகாப்பு, அதிக காப்பீடு வழங்க முடியும், என்று கௌரிஞ்சாஸ் கூறினார்.



பொருளாதாரத்தை ஆதரிப்பதற்கும், அது முடிந்ததும் மீண்டும் எழுவதற்கும் இது ஒரு மிக முக்கியமான காரணியாகும். நடக்கும் எல்லா வகையான வியங்களிலும் அதிர்ச்சிகள் இருக்கப் போகின்றன. மேலும் இது மிகவும் சுறுசுறுப்பான மற்றும் இலக்காகக் கொண்ட ஒரு வியத்திற்கு இந்த வாய்ப்பை வழங்குகிறது, என்று அவர் ஒரு கேள்விக்கு பதிலளித்தார்.

**(மூலம்: பிஸ்னஸ் ஒன் லைன் - ‘த ஹிண்டு’)**

# நேரடிப் பணப் பரிமாற்ற கட்டமைப்பு இந்தியாவில் ஓர் அரிய ஒழுங்கமைப்பு

## பாரதத்துக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு




இந்தியாவின் நேரடி பணப் பரிமாற்ற திட்டத்துக்கான கட்டமைப்பை அதிசயம் என்று சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது.

பெண்கள், விவசாயிகள், முதியோர் உள்ளிட்டோருக்கு மத்திய அரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. முன்பு நலத்திட்ட உதவிகள் மக்களின் கைகளில் பணமாக வழங்கப்பட்டு வந்தது. இதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றன.

இந்தச் சூழலில் மத்திய அரசு கடந்த 2013ஆம் ஆண்டு நேரடி பணப் பரிமாற்றத் திட்டத்தை தொடங்கியது. அதாவது நலத் திட்டங்களுக்கான ரொக்கம் பயனாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தும் வகையில் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இதற்காக, வங்கிக் கணக்கு இல்லாத மக்களுக்கு வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டது. இதில் நலத்திட்ட உதவிகள் நேரடியாக வரவு வைக்கப்பட்டன. இதனால் முறைகேடுகள் குறைந்தன.

இதுகுறித்து சர்வதேச நாணய நிதியத்தின் நிதி விவகாரத் துறையின் துணை இயக்குநர் பாலோ மாவ்ரோ கூறுகையில், இந்தியாவிலிருந்து கற்றுக்கொள்ள நிறைய உள்ளன. மிகப் பெரும் மக்கள்தொகை கொண்ட நாடு இது. பெண்கள், முதியோர், விவசாயிகள் என சமூகத்தின் பல தரப்பட்ட மக்களுக்கு நலத்திட்டங்களை இந்தியா நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்த நலத் திட்ட நிதிமக்களின் வங்கிக் கணக்குக்கே வழங்கப்படுகிறது. லட்சக்கணக்கானோருக்கு நிதியை நேரடியாக வழங்க தொழில்நுட்ப ரீதியாகவலுவான கட்டமைப்புத் தேவை. இந்தியா அதை சாத்தியப்படுத்தியுள்ளது. இது ஓர் அதிசயமான கட்டமைப்பு என்றார்.

நலத் திட்டங்களுக்கான ரொக்கம் பயனாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

**(நனறி: த ஹிண்டு - பிஸ்னஸ் ஒன் லைன்)**

# உலகின் பொருளாதாரம் மந்த நிலைக்கு; அதற்கு மத்தியிலும் இந்தியா சமாளிக்கும்

## உத்தேசக் கணிப்பு அறிக்கையில் தெரிவிப்பு

புதுடெல்லி, ஒக்.14

உலகப் பொருளாதார கணிப்பு அறிக்கையை சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ளது.

அதில், 2021இல் 6 சதவீதமாக இருந்த உலக பொருளாதார வளர்ச்சி 2022 இல் 3.2 சதவீதமாகக் குறையும் என்றும், 2023 இல் இது 2.7 சதவீதமாக மேலும் குறையும் என்றும் கணித்துள்ளது.

வளர்ந்த நாடுகளின் பொருளாதாரமும் கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பெரும்பாலும் குறையும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.


வளர்ந்த நாடுகளில் கடந்த 2021 இல் 5.2 சத வீதமாக இருந்த வளர்ச்சி, 2022 இல் 2.4 சத வீதமாகவும், 2023 இல் 1.1 சத வீதமாகவும் சரியும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2021 இல் 5.7 சத வீதமாக இருந்த அமெரிக்க பொருளாதார வளர்ச்சி, 2022 இல் 1.6 சத வீதமாகவும், 2023 இல் ஒரு சத வீதமாகவும் குறையும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

இதேபோல், கடந்த 2021 இல் 8.1 சத வீதமாக இருந்த சீன பொருளாதார வளர்ச்சி, 2022 இல் 3.2 சத வீதமாகவும், 2023 இல் 4.4 சத வீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

உலகின் 5 ஆவது மிகப் பெரிய பொருளாதார நாடாகத் திகழும் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி கடந்த 2021 இல் 8.7 சதவீதமாக இருந்த நிலையில், அது சற்று குறைந்து 2022 இல் 6.8 சதவீதமாக இருக்கும் என்றும், 2023 உல் அது 6.1 சதவீதமாக இருக்கும் என்றும் சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.






பொருளாதார வளர்ச்சியில் குறைவு இருந்தாலும், உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட நாடாக இந்தியா தொடரும் என்றும் சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## இந்தியாவுடன் இணைந்தே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்ட அபிவிருத்தி திட்டத்தில் சில அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இதில் துறைமுக அபிவிருத்தி மற்றும் எண்ணெய் தாங்கி மேம்பாடு ஆகியவை உள்ளடங்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் திருகோணமலை ஓர்ஸ் ஹில்லில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு எண்ணெய் தாங்கிகளை வழங்க முற்பட்டபோது முன்வைக்கப்பட்ட எதிர்ப்புகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அன்று எண்ணெய் தாங்கிகளை வழங்கியிருந்தால், இன்று நாடு எரிபொருள் நெருக்கடியை எதிர்நோக்கியிருக்காது என்றும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் ஆரம்பிப்பதற்கு முன்னர், திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்திசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பல இடங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓர்ஸ்ஹில்லில் இருந்தபடி அவதானித்தார்.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடலின்போது ஜனாதிபதி மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:-

திருகோணமலையில் விமான நிலையம் இருந்தாலும் அங்கே பெரிய விமானங்களை தரையிறக்க முடியாது. எனவே, ஹிங்குரக்கொடை அல்லது வவுனியாவை சர்வதேச விமான நிலையை தலமாக உருவாக்குவதற்கான நிலைமை ஏற்படும். திருகோணமலை முதல் மட்டக்களப்புவரையிலானசுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக நாம் முழுமையான திட்டத்தை உருவாக்க வேண்டும். அதே போன்று வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் உள்ளது.

வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் திருகோணமலை அமைந்துள்ளது. அதேபோன்று வடமத்திய மாகாணத்தை எடுத்துக்கொண்டால் அநுராதபுரம் மற்றும் பொலனறுவையின் பெரும் பகுதி இப்பிரதேசத்துக்கே சொந்தமாகின்றது.

இந்த கூட்டு வேலைத்திட்டத்தை 5 வருடங்களில் செய்ய முடியாது. இதனை 20 - 25 வருடங்களில் செய்யலாம். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்ற 10 வருடங்கள் தேவைப்பட்டன. எனவே, இதன் பணிகள் குறித்து கலந்தாலோசித்துப் பின்னர் அமைச்சரவையின் தீர்மானத்துடன் இந்தச் செயல் திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவுள்ளோம் - என்றார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், திருகோணமலை மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர் மற்றும் அதிகாரிகள், இலங்கை துறைமுக அதிகாரசபை, முதலீட்டு ஊக்குவிப்புச்சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் அதிகாரிகள், திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி திட்டத்தை உருவாக்குவதில் ஆலோசனைப் பங்களிப்பை வழங்கிய நிறுவனத்தின் பிரதான திட்டமிடல் நிறைவேற்று அதிகாரி, கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் என்போரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## ஈழ இளையோர் இருவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்த இருவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரியும் சகோதரனும் என தெரியவந்துள்ளது.

ரொறன்ரோ மார்க்கம் வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகலில் மார்க்கம் வீதி மற்றும் எல்சன் வீதி சந்திப்புக்கு அண்மையில் கனரக வானம் ஒன்று இந்த இளையோர் பயணித்த வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் யாழ்பாணத்தின் சுதுமலையை பூர்வீகமாக கொண்ட புவன் பூபாலசிங்கம் தம்பதிகளின் இரு பிள்ளைகளான நிலா, பாரி ஆகிய இருவரும் மரணம் அடைந்தார்கள்.

## நடுத்தர வர்க்க .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசாங்கம் ஒரு பிரத்தியேக வரத்தமானி மூலம், இந்த வரிவிலக்கு, அதாவது 3 லட்சம் ரூபாய்க்கு மேலாக இருந்த வருமான வரியை ஒரு லட்சமாக மாற்றி ஓர் அறிவித்தலை அரசு வெளியிட்டுள்ளது.

அதாவது கடந்த காலங்களில் மாத வருமானம் மூன்று லட்சம் ரூபா வரையும் வரி கிடையாது. ஆனால் தற்போது வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலின் படி ஒரு லட்சம் ரூபாவிற்கு மேல் வருமானம் என்றால் வரி அறவிடப்படும்.

இப்படியாக பார்க்கும் போது இவ்வாறு வரிவிதிப்பு நடுத்தர வர்க்க மக்களைத் தான் கூடுதலாக பாதிக்கும். ஏனென்றால் அவர்கள்தான் இந்த ஒரு லட்சம் ரூபாக்கு மேலான வருமானத்தைப் பெறுபவர்களாக இருப்பார்கள். அரச உத்தியோகத்தர்கள் அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு தான் இந்தப் பாதிப்பு ஆகக் கூடுதலாக ஏற்படவுள்ளது.

ஏற்கனவே அவர்கள் வறுமை கோட்டுக்கு கீழே செல்கின்ற நிலையில்தான் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய நிலைப்பாடு மிகவும் மோசமான நிலையில் தான் வரப்போகின்றது என நான் கருதுகின்றேன்.

நிச்சயமாக வரிகள் கூட்டப்பட வேண்டும். ஆனால் அது யாருக்கு கூட்டப்பட வேண்டும் என்றால் ஆக மேல் மட்டங்களில் இருப்பவர்கள், இன்றும் வரி கட்டாது ஏய்த்துக் கொண்டிருப்பவர்கள் அவர்களிடமிருந்து வரியை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த சாதாரண நடுத்தர வர்க்கத்தில் உள்ள மக்கள் மீதோ அல்லது மறைமுக வரிகளாக இந்த வற் (பெறுமதி சேர்க்கப்பட்ட) வரிக போன்றவற்றை உயர்த்துவதன் மூலமோ நிச்சயமாக பாதிக்கப்பட்ட மக்கள்தான் மீண்டும் பாதிப்பிற்கு உள்ளாகப் போகின்றார்கள். இதை அரசாங்கம் சரியாக உணர்ந்து முன்னேற்றகரமாக சமூகத்தை கொண்டு செல்லக்கூடிய வகையிலான வரிகளை விதிக்க வேண்டும். - என்றார்.

## ஞானசாரருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீலனி பெரேரா நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி, முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையில் இனக்குரோதத்தை ஏற்படுத்தும் வகையில், கருத்துகளைத் தெரிவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், நீதிமன்றத்தில் ஆஜராகாமையை அடுத்தே அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது அவர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, தனது தரப்பைச் சேர்ந்தவர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார் என மேலதிக நீதிவானின் கவனத்துக்கு கொண்டுவந்தார். அதனையடுத்தே அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## அனைத்து விளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திருகோணமலை மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

பாரம்பரியமாக விவசாயம் செய்யப்பட்டு வந்த அநேகமான விளை நிலங்கள் போரினால் கைவிடப்பட்டு, பின்னர் வன ஜீவராசிகள் மற்றும் வனவள பிரதேசமாக எல்லையிடப்பட்டுள்ளன. அவ்வாறான பாரம்பரிய காணிகளை மீள விவசாயிகளுக்கு வழங்குவது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

விவசாயிகளின் பிரச்சினைகளை விரைவாக தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, எதிர்வரும் போகத்தை சிறந்த முறையில் முன்னெடுப்பதன் மூலம் 2023 இல் ஏற்படக்கூடிய உணவு நெருக்கடியைச் சமாளிக்கத் தயாராக வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் போக்கு தொடர்பான வேலைத்திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள விதம் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் திருகோணமலை மாவட்ட செயலாளர், மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு படைகளின் பிரதானிகள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வன்முறைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனைத்துத் தரப்பினரும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திருகோணமலைக்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்டார். இதன்போது திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின் போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துரைக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள் காணி மற்றும் வீட்டு வசதிகள் அற்று வாழ்கின்றனர் என்றும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

ஊடகவியலாளர்களின் சகல விடயங்களையும் கேட்டறிந்த ஜனாதிபதி, இவ்விடயம் தொடர்பாகக் குழுவொன்றை நியமித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக வாக்குறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து திருகோணமலை கடற்கரையையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

## இலங்கையின் கடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மறுசீரமைப்பது தொடர்பாக கடந்த மாதம் இந்திய மற்றும் சீன அதிகாரிகளுடன் 'பரிஸ் கிளப்' யோசனைகளை பரிமாறிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து துரிதமான பதில் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை என பரிஸ் கிளப் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா, ஜேர்மனி, ஆஸ்ரேலியா உள்ளிட்ட அபிவிருத்தியடைந்த நாடுகளை பரிஸ் கிளப் உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதிசெயலர் சம்பந்தனிடம் மன்னிப்புக் கோரல்!

## ஊடக சந்திப்பில் அவரே பகிரங்கம்



எனது பதிவின் மூலம் சம்மந்தனின் சிறப்புரிமை மீறப்பட்டமைக்காக மன்னிப்பைக் கோருகின்றேன் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதிச் செயலாளர் யோகராஜா சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக விய லாளர் சந்திப்பிபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் கடந்த 19.07.2021 அன்று நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தமையை வீடியோவாக முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்திருந்தேன்.

அந்த முகப் புத்தக பதிவு தொடர்பில் 06.08.2021 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது நாடாளுமன்ற உரையில் எனது முகநூல் பதிவினூடாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்மந்தனுடைய சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும் குறித்த பதிவு தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

இவ்விடயம் தொடர்பில் விசாரணைக்காக கடந்த 04.10.2022 அன்று நாடாளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டு நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தேன்.

நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவின் தவிசாளர் விஜயதாஸ ராஜபக்ஷ முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையில் என்னுடைய முகப்புத்தகப் பதிவில் வெளியிடப்பட்ட வீடியோ மூலம் நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமை மற்றும் அதை மீறுவோருக்கான சட்ட ஏற்பாடுகள் குறித்து குழுவின் தவிசாளர் விஜயதாஸ ராஜபக்ஷ எனக்கு தெளிவுபடுத்தியிருந்தார். சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொண்ட நான் அதற்கு மன்னிப்பும் கோரியிருந்தேன்.

நான் ஒரு கட்சியின் உறுப்பினர் என்கின்ற ரீதியில் அரசியல் கருத்து சுதந்திரத்தின் அடிப்படையில் சம்பந்தன் நாடாளுமன்றத்துக்கு வருகை தரும் போது கைத்தாங்கலாக அழைத்து வரப்பட்டமையை சுட்டிக்காட்டி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இளையவர் ஒருவருக்கு வழங்கலாம் எனவும், எனது கருத்தைப் பதிவு செய்திருந்தேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைதொடர்பிலும் அதுதொடர்பான சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலும் எனக்கு மட்டுமல்ல பொது மக்களுக்கும் தெளிவு இல்லை. நாடாளுமன்றத்தில் வீடியோ எடுக்கப்பட்டது இது முதல் தடவையல்ல பல தடவைகள் இவ்வாறு வீடியோக்கள் எடுக்ககப்பட்டுள்ளன.

உதாரணமாக, நாடாளுமன்றத்தில் மிளகாய்த்தூள் வீசப்பட்ட சம்பவத்திதை வீடியோவாகப் பதிவு செய்யப்பட்டு ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. அப்போது வீடியோ பதிவு செய்தவருக்கு எதிராக இவ்வாறான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பபட்டிருந்தால் ஊடகங்கள் வாயிலாக எனக்கும் தெளிவு கிடைத்திருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை தொடர்பில் போதிய தெளிவின்மையால் குறித்த வீடியோவை பதிவு செய்தமைக்காக மன்னிப்பையும் கோரியிருந்தேன்.

பின்னர் இருசாராரும் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தோம். எனது பதிவின் மூலம் சம்மந்தனின் சிறப்புரிமை மீறப்பட்டமைக்காக ஊடகங்கள் வாயிலாகவும் மன்னிப்பைக் கோருகின்றேன்.

என்னுடைய எழுத்துக்கள் இவர்களுடைய அரசியல் நகர்வுகளுக்கு பெரும் சவாலாக இருப்பதால் எனது குரலை நசுக்குவதற்காக எடுக்கும் முயற்சியே இது. தொடர்ச்சியாக நான் அச்சுறுத்தப்பட்டு வருகின்றேன். தேர்தல் முடிவுற்று மூன்று மாதங்களின் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு முன்னால், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் என்னை சந்தித்திருந்தார் 'நீங்கள் எனக்கு எதிராக அதிகமாக எழுதுகின்றீர்கள். உங்களுக்கு குடும்பம் பிள்ளைகள் இருக்கு பார்த்து நடந்துகொள்ளுங்கள்' என மிரட்டும் தொனியில் கூறிவிட்டுச் சென்றார்.

அதன் பின்னர் பல ஊடகவியலாளர் சந்திப்புக்களில் எனது பெயரைக் குறிப்பிடாமல் முகப்புத்தகத்தில் ஒருவர் ஊடகவியலாளர் என்று சொல்லிக்கொண்டு எனக்கு எதிராக செயற்படுகின்றார் என குறிப்பிட்டிருந்தார்.

தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள் தங்களுக்கு ஆதரவாக செயற்படாத ஊடகவியலாளர்களையும், தங்களுக்கு எதிராக செயற்படுபவர்களையும் அடக்கும் செயற்பாடுகளை தொடந்தும் முன்னெடுத்து வருகின்றனர். ஊடக சுதந்திரம், ஊடக அடக்குமுறை, கருத்துச் சுதந்திரம் என மேடைக்கு மேடை பேசும் இவர்கள் தற்போது கருத்து சுதந்திரத்தை அடக்க முற்படுகின்றனர்.

சிறப்புரிமை என்பது நாடாளுமன்ற உறுப்பினர் சம்மந்தனுக்கு மட்டுமானது அல்ல ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு. மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் பல உறுப்பினர்கள் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை மிகக் கீழ்த்தரமாக விமர்சித்துவருகின்றனர்.

பாதிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் சிறப்புரிமையை மீறி விமர்சித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். நாடாளுமன்ற சிறப்புரிமை மற்றும் அது தொடர்பிலான சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவில்லை எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

# அரசுக்கு எதிராகப் போராடியவர்களை பிரபாகரன் எனச் சித்திரிக்காதீர்கள்!

## ரஞ்சித் மத்தும பண்டார ஜனாதிபதியிடம் கோரிக்கை



போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பிரபாகரனைப் போன்றவர்கள் எனக் குறிப்பிட்டு , அவர்களை பயங்கரவாதிகளாக சித்திரிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும், அவர்கள் விரும்பும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கும் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உள்ளூராட்சி தேர்தல் ஏற்கனவே ஓராண்டுக்கு காலம் தாழ்த்தப்பட்டுள்ளது. தற்போது மேலும் அதனை நீடிப்பதற்காகவே உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பில் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலைக் காலம் தாழ்த்துதல் என்ற கசப்பான மருந்தை இனிப்பாக வழங்குவதற்காகவே உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதாகக் கூறுகின்றனர்.

தற்போதுள்ள எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரையோ அல்லது உள்ளூராட்சி உறுப்பினரையோ மக்கள் ஏற்கத் தயாராக இல்லை. எனவே மக்களின் எதிர்பார்ப்புக் களை நிறைவேற்றுவதற்கும், அவர்கள் விரும்பும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கும் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படவேண்டும்.

இது இவ்வாறிருக்க மறுபுறம் வரிகளை அதிகரித்து மக்கள் மீது பாரிய சுமைகளை சுமத்திக் கொண்டிருக்கின்றனர். தனவந்தரான தம்மிக பெரேராவிற்கும், சாதாரண மக்களும் ஒரே அளவில் வரிகளை அறவிடுகின்றனர்.

அரச உத்தியோகத்தர்கள் கூட இந்த வரி அறவீட்டால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். வரிகள் ஒருபுறமிருக்க மறுபுறம் வட்டி வீதங்களையும் அதிகரித்துச் செல்கின்றனர். ஏற்கனவே வற் வரி 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அது தவிர சமூக பாதுகாப்பு வரி 1.5 வீதம் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

ஒருபுறம் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் அரசாங்கம், மறுபுறம் நிலக்கரி இறக்குமதி போன்றவற்றில் மோசடி செய்து கொண்டிருக்கிறது. அதே வேளை இதற்கு முன்னர் இடம்பெற்ற எந்தவொரு மோசடிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

ஆர்ப்பாட்டத்திற்கு தமது பிள்ளைகளை அழைத்துச் செல்லும் பெற்றோரை பிரபாகரனைப் போன்று செயற்படுகின்றனர் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கின்றார்.

தமது ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் மக்களை பயங்கரவாதிகளாக சித்திரிக்க வேண்டாம் என்று ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது பொதுஜன பெரமுன ஆட்டி வைக்கும் பொம்மையாகவே உள்ளார். நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கிய ராஜபக்ஷ குடும்பம் உள்ளிட்ட அனைவரையும் மக்கள் நிராகரிக்க வேண்டும். – என்றார்

# வெளிநாடுகளிலிருந்து அரிசியை கொள்வனவுசெய்ய அரசு முயற்சி!

## ஜனா எம்.பி. குற்றச்சாட்டு



சிறுபோகத்தில் அறுவடைசெய்த நெல்லை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் நெல்சந்தைப் படுத்தும் சபை உள்ள நிலையில் அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் முயற்சிகளை முன்னெடுத் துவருவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் பெரும்போக நெற்செய்கையை முன்னெடுப்பது தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந்த் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், மண்முனை தென் மேற்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் திருமதி தட்சனகௌரி தினேஸ், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், மாவட்ட விவசாய பிரதிப்பணிப்பாளர், பிரதேச நீர்பாசன பொறியியலாளர் சுபாகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தின்போது விவசாய பிரதேசங்களின் திட்ட முகாமைத்துவக் குழுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங் களுக்கமைய வயற்காணி உழுதல், விதைப்பு ஆரம்பித்தல், வேலி அடைத்தல், கால் நடைகள் அகற்றல், நீர் முகாமைத்துவம் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கான தீர்மானங்களும் இதன்போது நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன் போது வங்கி கடன்கள், கால் நடைப்பிரச்சினை, யானைப் பிரச்சினைகள், காடுகள் அழிப்பு, கடந்த சிறுபோகத்தில் விவசாயிகள் எதிர்கொண்ட பிரச்சினைகள், பெரும்போகத்தில் விவசாயிகள் எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகள், விவசாயிகளுக்கான மேம்பாட்டுத்திட்டங்கள், நீர்ப்பாசனம், நெல் கொள்வனவு, உரத்தின் விலையை நிர்ணயித்தல், சேதனைப் பசளை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.10.2022இல் வெளியிடப்பெற்றது.